GOKULAM

பிப்ரவரி 2009 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்



முதல் டெலி:ஃபோன் பேச்சு!



கதை சொல்லப் போறேன்...

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


851

852

853

854

855

856

857

858

859

860

861

862

863

864

865

866

867

868

869

870

871

872

873

874

875

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

கல்கி
தரம் நிரந்தரம்

பிப்ரவரி 2009 மலர் : 27 இதழ் : 1

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்



இருபத்தி ஏழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது உங்கள் கோகுலம்! இந்த இருபத்து ஆறு ஆண்டுகளில் நாம் கடந்து வந்த பாதையை நினைத்தால் கொஞ்சம் மலைப்பாகவும் இருக்கிறது.

ஆனால், வருங்காலத்தை வளமாக்கப் போகின்ற இளைய தலைமுறைக்கு, நல்ல செய்திகளை, பழக்கங்களை, எண்ணங்களை கோகுலத்தின் வழியே தந்திருக்கிறோம் என்கிற நிறைவு நிச்சயமாக உண்டு.

ஏற்றத் தாழ்வுகளும், பிரச்னைகளும் எதிர்ப்படத்தான் செய்யும். ஆனால், அதற்காக, தவறான விஷயங்களில் சமரசம் செய்துகொள்ளாமல், சரியான பாதையில் செயல்பட்டால் நீடித்த வெற்றி கிட்டும்.

அதுதான், கோகுலத்தின் வெற்றிக்குக் காரணம்! இதை நடைமுறைப்படுத்திக் கொண்டால் உங்களாலும் நீடித்த வெற்றியைப் பெறமுடியும். இந்த இதழில் பல்வேறு புதிய பகுதிகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

அன்புடன்,
கோகூ





கடி 'O' கடி



என்னதான் விழுந்து விழுந்து படித்தாலும், உட்கார்ந்துதான் தேர்வு எழுதியாகணும்.

- வே.தனசேகர்,
உறுப்பினர் எண் : 31,
கும்மிடிப்பூண்டி




செல்போன்ல எஸ்.எம்.எஸ். அனுப்பலாம். எஸ்.எம்.எஸ்.ல செல்போனை அனுப்ப முடியுமா?

- க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி



வேர்க்கடலை வேரில் இருக்கும். கொண்டைக் கடலை கொண்டையில் இருக்குமா?

- ஒய்.ரவீராகுல்,
கோபி



என்னதான் தேர்விலே முட்டை வாங்கினாலும் ஆம்லெட் சாப்பிடணும்னா கடைக்குப் போய்த்தான் முட்டை வாங்கணும்.

என்னதான் அறிவுப் பசி அதிகமானாலும், யாரும் புத்தகங்களை சாப்பிட முடியாது.

- அ.அனீஸ் ஃபாத்திமா,
உறுப்பினர் எண் : 34,
பதினொராம் வகுப்பு,
சிசம் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
போடிநாயக்கனூர்






யானைக்கு மதம் பிடிக்கும்னு எல்லோருக்கும் தெரியும். ஆனா அது எந்த மதம்னு யாருக்காவது தெரியுமா?

- வே.சித்ரா,
கும்மிடிப்பூண்டி

டி.வி.டி. ஆட்டம்?

கிரிக்கெட் பிளேயர் கிரிக்கெட் ஆடலாம். ஹாக்கி பிளேயர் ஹாக்கி ஆடலாம். ஃபுட்பால் பிளேயர் ஃபுட்பால் ஆடலாம். ஆனா டிவி.டி பிளேயர் டி.வி.டி. ஆடுமா?

- சி.விஜயாம்பாள்,
சந்தைப்பேட்டை



கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888
(30 lines)

தொலைநகல் :
044 - 4343 8899

மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு :
tamilgokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம்:
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!







"ஒரு ஊர்ல ஒரு பாட்டி இருந்தாளாம்..." என்று தாத்தாவும், பாட்டியும் சிறுவர்களை உட்கார வைத்துக் கதை சொன்னது அந்தக் காலம். இப்போது சிறுவர்கள் கதை சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். வெறும் கதையாக அல்ல; சொல்லும் போக்கிலேயே நடிப்பு, பாட்டு என்று எல்லாம் அதில் கைகோத்துக் கொண்டு வருகின்றன.

"ஒரு எறும்பும் ஈயும் கணவன் மனைவியாம். ஒருநாள் புருஷன் எறும்பு மனைவி 'ஈ'கிட்ட 'சமைச்சு வை. இதோ வரேன்'னு சொல்லிட்டு வெளில போச்சு. 'சரி'ன்னு சொல்லிட்டு ஈயும் சமைச்சுதாம். குழம்பு வெச்சிட்டிருந்தப்ப, 'வாசம் எப்படியிருக்கு'ன்னு பாக்க நினைச்சுது. அப்ப, அதுவே குழம்புல விழுந்து செத்துப் போச்சாம். கொஞ்ச நேரத்துல புருஷன் எறும்பு வீட்டுக்கு வந்துச்சு. பொண்



டாட்டியை தேடுச்சு. அப்புறம்தான் அது குழம்புல விழுந்து செத்துப் போனது தெரிஞ்சுச்சு.

உடனே 'ஓ'ன்னு சத்தம் போட்டு அழுதுச்சு. அந்த அழுகையைக் கேட்டு யானை வந்துச்சாம். எறும்புகிட்ட 'ஏன் அழுற'ன்னு கேட்டுச்சு. அதுக்கு எறும்பு, 'என் பொண்டாட்டி சாக, நான் தூக்குப்போட, உன் தந்தம் முறியன்'னுச்சு. உடனே யானையோட தந்தம் முறிஞ்சிடுச்சாம்.

தந்தம் முறிஞ்ச யானை சோகமா நடந்துச்சாம். அதைப் பார்த்த ஆலமரம், 'ஏன் சோகமா இருக்கே'ன்னு கேட்டுச்சு. உடனே யானை, 'ஈ சாக, எறும்பண்ணன் தூக்குப்போட, என் தந்தம் முறிய, நீ சாய'ன்னுச்சாம். உடனே ஆலமரம் சாய்ஞ்சு தரைல விழுந்துடுச்சு...'

நான்காம் வகுப்பில் பயிலும் - பர்கூரைச் சேர்ந்த, சிறுமி மணிமேகலை கதை சொல்லிக் கொண்டிருக்



கதை சொல்லப் போறேன்...

கிறாள். தன்னைவிட வயதில் மூத்தவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்கிற தயக்கமோ அச்சமோ இல்லை அந்தச் சிறுமியிடம்.

கணீரென்ற குரலில், ஏற்ற இறக்கங்களோடு, முகத்தில் பல்வேறு பாவங்களை வெளிப்படுத்தியபடி கதை சொல்கிறாள். மணிமேகலையைத் தொடர்ந்து, ஜபசிங், சதீஷ், பூபதி, கார்த்திக், வாசுகி, காயத்ரி, கீதாஞ்சலி, சுதாகர்...

● ராகவன்

என்று பதினைந்து சிறுவர் சிறுமியர் கதை சொல்கிறார்கள். அனைவரிடமும் இந்த கதை சொல்லும் ஆற்றல் பிரமாதமாக வெளிப்படுகிறது. இவர்கள் இறுதிப் போட்டிக்கு வந்துள்ளார்கள். இவர்களில் ஆறு பேர் விருது பெறப் போகிறவர்கள். இறுதிப் போட்டிக்கு பதினைந்து பேர் என்றால், மொத்தம் கலந்து கொண்டவர்கள் எத்தனை பேர்?


தமிழகம் முழுதும் 1700 கிராமங்களில் இருந்து சுமார் 9000 குழந்தைகள் இந்த 'இளம் கதை சொல்லி 2008' நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இருந்து ஒவ்வொரு கட்டமாக இந்தப் போட்டிகள் நடந்து வந்துள்ளன.

இந்தக் குழந்தைகளில் இறுதிக் கட்டத்துக்கு அறுபது குழந்தைகள் தேர்வாயினர். கடந்த ஜனவரி 2 மற்றும் 3ஆம் தேதிகளில் சென்னை கிண்டியில் உள்ள சிறுவர் பூங்காவில் நடந்த நிகழ்ச்சியின்போது, இவர்களில் 15 பேர் இறுதிப் போட்டிக்கு தேர்வு பெற்றனர். இந்தப் பதினைந்து பேரில் ஆறு பேர் விருதுக்குத் தேர்வு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியை 'இந்திய வளர்ச்சி இயக்கம்' நடத்தியது.

குழந்தைகளின் உலகமே மிக ஆச்சர்யமானது. அங்கே இடம் பெறாத உறுப்பினர்களே கிடையாது. ஈ, எறும்பு, யானை, முதலை, மரம், ஆறு... என்று உலகின் அத்தனை பரிமாணங்களையும் கதாபாத்திரங்களைக் கொண்டது குழந்தைகளின் உலகம்.

'ஐயோ பாவம்' என்று ஒரு எறும்பின் மரணத்தையும் கவலையோடு பார்க்கும் அற்புதமான உலகத்தை, சுமார் ஒன்றரை மணி நேரம் உணர வைத்தார்கள் அந்த





இளம் கதை சொல்லிகள். ஒருவருக்கொருவர் சளைக்காமல், அரங்கை தங்கள் கதை சொல்லும் உத்தியால் கட்டிப் போட்டார்கள்.

இந்த இறுதிப் போட்டியில், நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்பு பிரிவில், பார்கூர் மணிமேகலை,

சென்னை ஷைலா; ஆறு மற்றும் ஏழாம் வகுப்பு பிரிவில், சிவகங்கையைச் சேர்ந்த அலெக்ஸ் பாண்டியன் மற்றும் மேட்டுப் பாளையம் வாசுகி; எட்டாம் வகுப்பு பிரிவில் திருத்தணி ஜெபசிங் மற்றும் திருச்சி எம்.கார்த்திக் ஆகியோர் தேர்வு பெற்றனர்.

அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள் இந்திய வளர்ச்சி நிறுவனத்தின் தலைவரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான முனைவர் வசந்தி தேவி, எழுத்தாளர் இரா.நடராஜன், 'பூ' திரைப்படத்தின் இசை யமைப்பாளர் எஸ்.எஸ்.குமரன், முனைவர் பாலாஜி சம்பத், திருமதி ரங்கஸ்ரீ, விஷ்ணு ப்ரியா, கவிஞர் மு.முருகேஷ் ஆகியோர்.



'இளம் கதை சொல்லி 2008' என்ற பெயரில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டி மற்றும் விருது வழங்கும் நிகழ்ச்சி சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள அல்லயன்ஸ் பிரான்ஸில் அரங்கத்தில் நடைபெற்றது. விழாவில் World Story Telling Institute-ன் இயக்குனர் எரிக்மில்லர் கலந்து கொண்டு, கதை சொல்லும் முறை பற்றிப் பேசினார்.

"கதை சொல்லும்போது, எதிரே இருப்பவர்களில் யாராவது ஒருவரின் கண்களைப் பார்த்தபடி கதை சொல்வதே சிறந்தது. அதனால், கேட்பவர்களும் கதையோடு ஒன்றுவார்கள். அவர்களையும் கதாபாத்திரமாக மாற்றுவதே கதை சொல்வதன் சிறந்த உத்தி" என்றார் எரிக் மில்லர்.

விழாவை முன்னிட்டு சென்னை வந்திருந்த அறுபது சிறுவர்களில், ஐம்பது பேர் முதன் முறையாக சென்னைக்கு வந்தவர்கள் என்பதுதான் இந்த நிகழ்ச்சியின் மிகச் சிறப்பான விஷயம். சென்னையின் பல்வேறு பகுதிகளை சுற்றிப் பார்த்ததை அந்த 'இளம் கதை சொல்லிகள்' மறக்கமாட்டார்கள்; அவர்கள் கதை சொன்ன அழகையும் நம்மால் மறக்க முடியாது.

அட்டை, படங்கள் : ஸ்ரீஹரி

பொம்மைக்

அது உக்ரைன் நாட்டிலுள்ள ஒரு கிராமம். அங்கு வயது முதிர்ந்த கணவனும் மனைவியும் வசித்து வந்தனர். தார் தயாரிப்பதுதான் அந்தக் கிழவரின் தொழில். கிழவி வீட்டிலிருந்து நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். அவர்களின் வீடு காட்டுக்கு அருகில் இருந்ததால், காட்டு மிருகங்கள் அடிக்கடி வந்து தொல்லை கொடுத்தன. அவற்றின் தொல்லைகளை தவிர்க்க என்ன செய்யலாம் என்று யோசித்தாள் பாட்டி.

ஒரு நாள், பாட்டி, "எனக்கு ஒரு கன்றுக் குட்டி செய்து தாங்க. வைக்கோலால் தயாரித்து, அதன் மேல் தார் பூசி அலங்கரித்துக் கொடுங்க" என்று கணவரிடம் கேட்டாள்.

"என்ன முட்டாள்தனம் இது? உனக்கெதுக்கு பொம்மைக் கன்று?" கோபித்தார் கிழவர்.

"எனக்கு முதலில் செய்து கொடுங்க. எதற்காக கேட்டேன் என்று அப்புறம் தெரியும்" என்றாள் பாட்டி.

பாட்டி கேட்டது போலவே, வைக்கோல் மூலம் ஒரு காளைக் கன்றைத் தயாரித்து,





அதன்மேல் அங்கங்கே கறுப்புத் தாரைப் பூசி, அச்சு அசலாக ஒரு கன்றுக் குட்டியை உருவாக்கினார்.

அடுத்த நாள் காலை, பாட்டி அந்த வைக்கோல் கன்றைத் தூக்கிக் கொண்டு, அவள் வீட்டுக்கு அருகிலிருந்த ஒரு சிறிய குன்றுக்குப் போனாள்.பொம்மைக் கன்றை சிறிது தூரத்தில் நிறுத்திவிட்டு, நூல் நூற்கத் தொடங்கினாள். சற்று நேரம் சென்ற பின், கிழவி தூங்கி விழ ஆரம்பித்தாள்.

கன்று!



அப்போது, காட்டுக்குள்ளிருந்து ஒரு ஓநாய் வந்தது. காளைக் கன்றைப் பார்த்ததும், 'இன்று நல்ல வேட்டை தான்' என்று நினைத்து, அதன் மேல் பாய்ந்து, குரல் வளையைக் கடித்தது. அதன் பற்களும், நகங்களும் தாரில் வசமாகச் சிக்கிக் கொண்டன்.

எவ்வளவோ முயன்றும், ஓநாயால் பற்களையும், நகங்களையும் எடுக்க முடிய வில்லை. பொம்மைக் கன்றை இழுத்த வாறே, கிழவியின் வீட்டு வாசலில் வந்து விழுந்தது.

இதற்கிடையே கண் விழித்த பாட்டி, பொம்மைக் கன்றை காணாமல் தேடிவிட்டு, வீட்டுக்கு வந்தாள். அங்கே ஓநாயைப் பார்த்ததும், ''சீக்கிரம் வெளியே வாங்க. நம் கன்றுக்குட்டி ஒரு ஓநாயைக் கூட்டி வந்துள்ளது'' என்று கத்தி அழைத்தாள்.

தாத்தா ஓடி வந்து, ஓநாயின் பிடியி லிருந்து காளைக் கன்றை விடுவித்து, ஓநாயை நிலவறைக்குள் அடைத்தார்.

மறுநாள், பாட்டி அதே போல் காளைக் கன்றுடன் நூல் நூற்கப் போனாள். சற்று நேரத்தில் கிழவி நித்திரை கொள்ள, இன்று கரடி வந்து மாட்டிக் கொண்டது. இப்படியே மூன்றாம் நாள் கழுதைப் புலி, நான்காம் நாள் குள்ள நரி என்று நிலவறையே நிறைந்துவிட்டது.

ஐந்தாம் நாள், கிழவர் நிலவறையின் வாசலில் அமர்ந்து, பெரிய கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட ஓநாய் திகிலுடன், ''பெரியவரே! நீங்கள்

* தஸ்லிமா

விடையைச் சொல்; பரிசை வெல்-17ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.



சரியான விடைகள் :

1. ஹல்லிசகா, 2.மைக்கேல் எல்லிஸ் டிபெக்கே, 3.கல்லணை, 4.பக்குவாரா, 5.பிட்மான்

பரிசு பெறுவோர் :

1.என்.பத்மாவதி, மதுரை
2.கே.கோகுல்ராஜ், ஆண்டிப்பட்டி
3.எஸ்.பால்சன், மண்டபம்கேம்ப்
4.சி.ரஞ்சிதா, அணைக்கரை
5.கா.கலைவாணி, குடந்தை
6. ஷா.ஷப்ரீனா, திருவிதாங்கோடு
7. வி.தென்னிசை, நெய்வேலி
8. எல்.எம்.சுந்தரி, கிருஷ்ணகிரி
9. எம்.அனிஸா பேகம், கோபி
10. ஆ.அபர்ணா, வேங்கைவாசல்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்!
கலந்துகொண்டு அனைவருக்கும் நன்றி!

எதற்கு கத்தியைத் நீட்டுகிறீர்கள்?" என்று கேட்டது. அதற்கு பெரியவர், "உன்னுடைய தோலை உரித்து, குளிருக்கு இதமாக தொப்பி செய்யப் போகிறேன்" என்றார்.

ஓநாய் வெலவெலத்துப் போனது. "ஐயையோ! என்னைவிட்டு விடுங்கள். உங்களுக்கு ஒரு ஆட்டு மந்தையை ஓட்டி வந்து தருகிறேன்" என்று வாக்குறுதி அளித்தது. "என்னை ஏமாற்ற நினைத்தால், தொலைந்தாய்!" என்று எச்சரித்து ஓநாய்க்கு விடுதலை அளித்தார்.

இப்படியே குள்ளநரி, கரடி, கழுதைப் புலி எல்லாம் பரிசுகள் கொண்டு வருவதாக உறுதியளித்துவிட்டு, காட்டுக்குள் சென்றன.

அடுத்த நாள் அதிகாலை, தாத்தாவும், பாட்டியும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது யாரோ கதவைத் தட்டினார்கள். இருவரும் எழுந்து போய் கதவைத் திறந்து பார்த்தால், அங்கே ஓநாய் ஒரு பெரிய ஆட்டு மந்தையை கொண்டு வந்திருந்தது. அதைப் பட்டியில் அடைத்துவிட்டு வந்து படுத்தனர்.

சிறிது நேரங்கழித்து, கரடி சுத்தமான தேனடைகளைக் கொண்டு வந்து சேர்த்தது. அடுத்ததாக கழுதைப் புலி, கூட்டம் கூட்டமாக கோழி, வாத்துகளைக் ஓட்டி வந்தது. அதற்கடுத்து குள்ள நரி, ஓர் மூட்டை நிறைய கலர் கலர் ரிப்பன்கள், நெக்லஸ்கள், கம்மல்கள், வளையல்கள், மோதிரங்கள் ஆகியவற்றை அள்ளி வந்தது.

பரிசுகளைக் கண்டு இருவரும் சந்தோஷத்தில் மிதந்தனர். பாட்டியின் அறிவை தாத்தா மெச்சினார். அதன் பிறகு எந்த மிருகமும் அவர்களைத் தொல்லை செய்யவில்லை. ●

கோகுலம்

சிறுவர் சங்கம்

உறுப்பினர்களுக்கான போட்டி

டியர் குட்டீஸ்...

- நீங்கள் உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுவிட்டீர்களா?
- அந்தப் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ள எண்தான், உங்கள் உறுப்பினர் எண்.
- அடையாள அட்டை வந்து சேரவில்லை என்றாலும், உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட்டு, போட்டியில் நீங்கள் பங்கு பெறலாம்.
- இதுவரை உறுப்பினர் ஆகாதவர்கள், உடனே உறுப்பினராகுங்கள்.
- உறுப்பினர் கூப்பன் 67ஆம் பக்கத்தில்

☑ கதை ☑ கட்டுரை ☑ கவிதை ☑ ஓவியம் ☑ ஜோக்

ஆம்; இவ்வளவு போட்டிகளும் உறுப்பினர்களுக்காக மட்டுமே! மேலும் விபரங்கள் அடுத்த இதழில்...



தேர்வை எதிர்கொள்வது பற்றிய மேலும் சில செய்திகள்...

அவற்றில் முதலாவது, விட்டுப்போன குறிப்புகளை கேட்டு அறிவது; உதாரணமாக, பானிபட்டுப் போர் என்றால், 1526ஆம் ஆண்டு முதல் போர்; 1556ஆம் ஆண்டு இரண்டாம் போர் என்றும் தொடர்புபடுத்தி நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. அந்தப் போரில் யார் யார் ஈடுபட்டார்கள், வென்றது யார் என்பது வரை தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்தது, உணவு. தேர்வுக்கான சமயத்தில் கார்போஹைட்ரேட் நிறைந்த சத்துள்ள உணவுகளை சாப்பிடுதல் வேண்டும். காபியை மிதமாகச் சாப்பிடுவதும் நல்லது. அதேபோல், இனிப்பு பதார்த்தங்களை (சாக்லேட், லட்டு...) சாப்பிடுவதைக் குறைச்சா இனிக்கும் வெற்றி கிடைக்கும்.

தேர்வைப் பற்றிய எண்ணங்களாலோ, படித்த பகுதிகளை மீண்டும் மீண்டும் மனம் மறு வாசிப்பு

ஹேமா பிரபாகர்





செய்வதாலோ, சமயங்களில் இரவில் தூக்கம் வராத சூழல் ஏற்படலாம். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில், பகலில் சுமார் 30 நிமிடங்கள் ஓய்வு எடுங்கள். அந்த நேரத்தில் பேசுவது, பாடுவது என்று எதிலும் ஈடுபடாமல், உடலை தளர்வுபடுத்திக் கொண்டு படுத்திருங்கள். அமைதியான இடத்தில் இந்த ஓய்வெடுத்தால், அது இன்னமும் சிறப்பானது.

மற்றவர்கள் நம்மைக் கேலி செய்வதைவிட, நம் மனமே நம்மை ஏராளமாகக் கேட்கும். 'அவனுக்கு அது தெரியும். உனக்குத் தெரியாது', 'அவன் அப்படி; உன்னால முடியாது' - இப்படி எதிர்மறை எண்ணங்கள் நமக்குள்ளேயே ஏற்படும். அந்த எண்ணங்கள் நம்முடைய ஆர்வத்தையும், ஊக்கத்தையும் குலைத்து விடும்.

அந்த மாதிரி நேரங்களில், தூக்கம் இன்னமும் பாதிக்கப்படும். இதை விரட்ட, மூச்சுப் பயிற்சி செய்யலாம். நன்றாக மூச்சை உள்ளிழுத்து, வாய் வழியே மூச்சை விடுங்கள். இதை 50 முதல் நூறு முறை செய்யுங்கள். சுமார் மூன்று நிமிடங்கள். இப்படிச் செய்யும் போது, நம்மில் இருந்து புறப்பட்ட எதிர்மறை எண்ணங்கள்



விலகிப்போய்விடும்.

இனி மீதம் இருப்பது தேர்வை எழுதுவதுதான்.

தேர்வுக்குப் போகும் முன்பு சக மாணவர்களிடம் 'அதைப் படித்தாயா? இதைப் படிக்கவில்லையா?' என்றெல்லாம் பேசாதீர்கள். அத்தகைய பேச்சுக்களால் தேவையில்லாத பதற்றமும்,



பயம் விலகினால் பாஸ்!

குழப்பமும் உண்டாகும். அதன் விளைவாக எழுதும்போது தடுமாற்றம் ஏற்படும். எனவே, தேர்வுக்கு முன்பாக அநாவசியப் பேச்சை விலக்குங்கள்.

தேர்வுக்கூடத்தில் அமர்ந்தவுடன் நிதானமாக மூச்சை இழுத்து விடுங்கள். உங்களுக்குள் இருக்கும் பதற்றம் தணியும். கேள்வித்தாளை வாங்கியவுடன் பரபரவென்று பேனாவைத் திறக்காதீர்கள். கேள்விகளை நிதானமாகப் படியுங்கள். பிறகு நன்றாகத் தெரிந்த விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுத ஆரம்பியுங்கள்.

நீங்கள் படித்ததும், படித்ததை புரிந்து கொண்டதும் எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு குறிப்பிட்ட நேரத்துக்குள் எழுதுவதும் முக்கியம். எனவே நேரத்தை கவனமாகக் கடைப்பிடியுங்கள். அதேசமயம், நேரம் குறைகிறதே என்கிற படபடப்பில் எழுத வேண்டியதை எழுதாமல் விட்டுவிடாதீர்கள்.

இதையெல்லாம்விட முக்கியமான விஷயம், கேள்வித்தாள் வாங்கியவுடன் ஏற்படும் கைநடுக்கம். பதற்றமும் பயமும்தான் இதற்கான காரணம்! எனவே கைநடுக்கம் ஏற்படும் சமயத்தில் கைகளை அசைத்தும், மூச்சுப் பயிற்சி செய்தும் உங்களை உற்சாகமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்னொன்று, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைதெரியுமா என்பது மட்டும்தான் தேர்வின் அளவுகோல். அதற்கான விடையைத் தெரிந்து கொள்வதும், பதிலளிப்பதும் முக்கியமானதுதான். அதே சமயம், அவற்றில் எதுவும் தெரியாவிட்டால், 'உங்களுக்கு ஒன்றுமே தெரியாது' என்று நினைத்து மனந்தளர்ந்துவிடவேண்டாம். ஏனென்றால் அந்த நினைப்பு, அடுத்த தேர்வுகளில் தடையைத் தந்துவிடும். எனவே, பாடங்களை கவனித்துப் படியுங்கள்; கேள்விகளை நிதானமாகப் படியுங்கள்; விடைகளை விரைவாக எழுதுங்கள். திருத்தமான பதிலும், தெளிவான கையெழுத்தும் உங்களுக்கு நிச்சயம் வெற்றியைத் தரும். ஆல் தி பெஸ்ட்!

சுதந்திர இந்தியாவில், முதல் பொதுத் தேர்தலிலேயே ஜாதி, மதம், படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், ஆண், பெண் என்று எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல், 21 வயதான அத்தனை குடி மக்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. இப்போது பதினெட்டு வயதானவர்களும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் உலக நாடுகள் பலவற்றில் இந்த நிலைமை கிடையாது. பல நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது. இடைவிடாத போராட்டங்களின் பயனாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சி காரணமாகவும்






கௌதம்ராம்


இன்று பல நாடுகள் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கி உள்ளன.

● நியூஸிலாந்து நாடு, பிரிட்டிஷ் காலனியாக இருந்த கால கட்டத்திலேயே பெண்களுக்கு தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை வழங்கி இருந்தது. 1893ஆம் ஆண்டு முதல் பெண்கள் வாக்களிக்கும் நியூஸிலாந்துதான், பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் நாடு என்ற பெருமையைப் பெறுகிறது.

● 1755ல் கார்சிகான் குடியரசு என்ற நாட்டில் நகராட்சித் தேர்தல்களில் குடும்பத் தலைவருக்கு வாக்குரிமை இருந்தது. இதன் காரணமாக ஆண், பெண் வித்தியாசமின்றி, யார் குடும்பத் தலைவர் பொறுப்பு வகிக்கிறாரோ அவர் தேர்தல்களில் வாக்களித்தார். ஆனால், இந்த நாட்டை பிரான்ஸ் கைப்பற்றியதையடுத்து, பெண்களின் வாக்குரிமை பறிபோனது.



● பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் ஐரோப்பிய நாடு பின்லாந்து. 1905ல் வாக்குரிமை பெற்ற பின்லாந்து பெண்கள், அடுத்த ஆண்டு தேர்தலில் நிற்கும் உரிமையையும் பெற்றார்கள். அடுத்த பத்தாண்டு காலத்தில்




போடுங்கம்மா வோட்டு!

நார்வே, டென்மார்க், கனடா, போலந்து, ஜெர்மனி, துருக்கி என்று பல நாடுகள் பின்லாந்தைப் பின்பற்றின.

● 1934ல், கிரீஸ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த, 30 வயதான பெண்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டாலும்கூட, 1952ல் அந்த விதி, வயது வந்த அனைத்துப் பெண்களும் வாக்களிக்கலாம் என்று தளர்த்தப்பட்டது.

● 1931ல் போர்ச்சுகல் நாட்டில், ஆண்கள் எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும்; ஆனால் பெண்கள் பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை முடித்திருக்க வேண்டும் என்று வாக்குரிமைக்கு கல்வித் தகுதி வரையறுக்கப்பட்டிருந்தது. இடைவிடாத போராட்டத்தின் பலனாக 1974ல் ஆண்களுக்கு இணையான வாக்குரிமையைப் பெற்றனர்.

● எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி 21 வயதான பெண்களுக்கு வாக்குரிமையளித்த முதல் ஆசிய நாடு ஸ்ரீலங்கா. அதன் பலனாகத்தான் உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமை அந்நாட்டின் ஸ்ரீமாவோ பண்டாரநாயகேவுக்குக் கிட்டியது.



● ஸ்விட்சர்லாந்து நாட்டில் 1973ல்தான் பெண்கள் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வாய்ப்புப் பெற்றனர்.

● 1907ல் நடைபெற்ற பெண்கள் பேரணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. போராட்டத்தில் கைதாகி, நீதிமன்றம் விதித்த அபராதத்தைக் கட்ட மறுத்து பெண்கள் சிறை சென்ற விவகாரம், பிரிட்டனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 1928ல் நிறைவேற்றப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பெண்கள் வாக்களிக்க வழி செய்தது.



வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல்-18ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1.பாக் நிருத்யா, 2.ரோஸ்ட்ரம்,, 3.காக்ட்டன், 4.குஜராத், 5.மாணிக் சர்க்கார்

பரிசு பெறுவோர் :

1.கா.நத்தானியேல், செங்கல்பட்டு
2.ஏ.கோமதி, தூத்துக்குடி
3.பிரகதீஷ்சுப்ரமணியன்,, புதுச்சேரி
4.எம்.ஆர்.கௌதம், வேலூர்
5.க.வினோத்கண்ணா, காரைக்குடி
6.எஸ்.பூர்ணவல்லி, திருச்சி
7.ஆர்.பிரியங்கா, வத்தலக்குண்டு
8.ர.மீனாதேவி, உடுமலை
9.ஏ.ஹம்சத் தவ்ஹா, இராமநாதபுரம்
10.தி.க.பா.சந்துரு, புதுக்கோட்டை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்!
கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

இந்திய நாடு... தொடரின் முதல் பாகம் நிறைந்தது. இரண்டாம் பாகம் விரைவில்...

● நிற வேற்றுமை கடைபிடிக்கப்பட்ட தென் ஆப்ரிக்காவில், அக்கொள்கை கைவிடப்படும் வரை பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது.

● 1948ல், ஐ.நா.சபை, மனித உரிமை பிரகடனத்தை அறிவித்தது. அதன்படி, உலக நாடுகள் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

● லெபனான் நாட்டில், பெண்களுக்கு ஆரம்பக்கல்வி பயின்ற ஆதாரம் காட்டினால்தான் ஓட்டுப்போட முடியும். ஆனால் ஆண்களுக்கு எந்த ஆதாரமும் தேவை இல்லை. அதே போல, ஆண்கள் கட்டாயம் வாக்களிக்க வேண்டும்; ஆனால் பெண்கள் விருப்பப்பட்டால் வாக்களிக்கலாம்.


● இன்றைக்கும் சவுதி அரேபியா உள்ளிட்ட சில வளைகுடா நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது. 2009ல் சௌதி பெண்களுக்கு வாக்குரிமை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பெண் வாக்காளர்கள் குறித்த சில விபரங்கள் : இந்தியாவிலேயே மிக அதிக பெண் வாக்காளர்கள் உள்ள மாநிலம் : உத்திரப் பிரதேசம் (5.24 கோடி பேர்). அதிக பெண் வாக்காளர்களைக் கொண்ட ஐந்து மாநிலங்கள் : உ.பி., மகாராஷ்டிரா, ஆந்திரா, பீகார், மேவங்காளம். மிகக் குறைவான பெண் வாக்காளர்களைக் கொண்ட பகுதி : லட்சத்தீவு. தமிழ்நாட்டின் மொத்த வாக்காளர்கள் : 3.99 கோடி. இதில் பெண் வாக்காளர்கள் சரிபாதி. ●

வண்ணம் தீட்டுங்கள்!

கைக்கு வேலை





தீபாவளின்னா பட்டாசு
பட்டாசுன்னா சிவகாசி...

இது அனைவருக்குமே தெரியும். ஆம். தீப்பெட்டித் தொழிலை போலவே பட்டாசு தயாரிப்பிலும் இந்தியாவில் முதலிடம் பெற்ற சிவகாசிதான் எங்கள் ஊர். பட்டாசு தொழிற்சாலை இங்கே முதன் முதலாக 1923ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது சிவகாசி. மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் கி.பி. 1420ம் ஆண்டு சிவகாசி நகரத்தை உருவாக்கினான். எங்கள் ஊரில் பெரிய சிவன்கோவில் ஒன்று உள்ளது. இதன் வாயிற்கதவே 24 அடி உயரம். காசியில் உள்ள கங்கை இங்கே ஊறி வருவதாக ஐதீகம்.

இந்தியா முழுதும் பயன்படும் தீப்பெட்டிகளில் பெரும்பகுதி எங்கள் ஊரில்தான் தயாரிக்கப்படுகிறது. இங்கு, முதல் தீப்பெட்டித் தொழிற்சாலை 1923ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

பட்டாசை உலகத்துக்கு அறிமுகப் படுத்திய சீனாவையே மிஞ்சும் அளவிற்கு எங்கள் ஊரில் விதவிதமான பட்டாசுகள் தயாராகின்றன. ஆண்டு தோறும் சிறுவர் முதல் பெரியவர் வரை மகிழும் விதத்தில் பல புதுரக வெடிகளை எங்கள் ஊர் அறிமுகப்படுத்துகிறது. எங்கள் ஊரில் குழந்தைத் தொழிலாளர் என்பது அறவே இல்லை. எங்கள் ஊரிலிருந்துதான் பல்வேறு மாநிலங்களுக்கும் பட்டாசுகள் அனுப்பப்படுகின்றன.

தீப்பெட்டி, பட்டாசு தொழிலைப் போலவே, வண்ண அச்சுத் தொழிலிலும் எங்கள் ஊர் சிறப்புற்று விளங்குகிறது. முதல் அச்சுக்கூடம் எங்கள் ஊரில் 1922ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியாவில் அச்சுக்கலை தொழிலில் எங்கள் ஊர் ஐந்தாம் இடத்தில் உள்ளது.

பல வண்ண காலண்டர்கள், போஸ்டர்கள், புத்தகங்கள், சுவரொட்டிகள்... என்று அச்சுக் கலையின் அனைத்துப் பரிமாணங்களிலும் புகழ் பெற்றது எங்கள்

குட்டி


ஊர். அதனால் பணப்புழக்கம் நிரம்பிய ஊராகத் திகழ்கிறது சிவகாசி.

இத்தகைய தொழில்வளர்ச்சி காரணமாக எங்கள் ஊர் 'குட்டி ஜப்பான்' என்றும்









அழைக்கப்படுகிறது.

தமிழக அரசின் சின்னமாக விளங்கும் கோபுரம், எங்கள் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் கோபுரம்தான். திருவண்ணாமலை என்ற பெயரில் இங்கே மலைமீது பெருமாள் கோயில் ஒன்றும் உண்டு. அய்யனார் அருவி, அணில் சரணாலயம் என்று பார்க்கத் தகுந்த பல இடங்கள் எங்கள் மாவட்டத்தில் உண்டு.


திருவண்ணாமலையில் மகாசமாதி அடைந்த ரமணமகரிஷி பிறந்த திருச்சுழி, பதினெட்டு சித்தர்களும் வசித்த பெருமைக்குரிய சதுரகிரி போன்றவை எங்கள் ஊரின் அருகிலுள்ள ஆன்மிகத் தலங்களாகும்.


- சு.துர்காதேவி,
பத்தாம் வகுப்பு,
வேளாங்கண்ணி மாதா
மேல்நிலைப் பள்ளி,
சிவகாசி




ஜப்பான்






பரிசு!
கதை, படம்: வீரமுடி
கவி, நீ ஒழுங்கா படிக்கிறதில்ல. இப்படியே போனா ஃபெயில்தான் ஆவே!
அடடா... அப்பா கோபிக்கிற அளவு ஆகிவிட்டதே...
இனி... கவனமாய் படிக்கவேண்டும். என்ன செய்யலாம்.
ம்... காட்டு பங்களாவுக்குப் போய் படிக்கலாம். அமைதியா இருக்கும்.
அரையாண்டுத் தேர்வு முடிவுகள் வந்தன.
குட் கவி, 92% எடுத்திருக்க. இன்னும் நல்லா படி. ஸ்டேட் ஃபர்ஸ்டா வரலாம்.
மீண்டும்... காட்டு பங்களாவுக்குப் போய் படிக்க ஆரம்பித்தான். ஒரு நாள்...
டுமீல்
என்ன சத்தம்? எதுவும் குவாரி வந்திருக்கா என்ன?


வீட்டை விட்டு வெளியேறினான். குன்றின் மேல் ஏறிப் பார்த்தான். அங்கே...
டேய்... அந்தப் பயலைப் பிடி. இல்லைன்னா நமக்கு ஆபத்து.
ஆ... தீவிரவாதிகள்...
கவி, தப்பிக்கும் முன் தலையில் விழுந்தது அடி...!
ஆ...
அட... ஆள் குளோஸ்! இனிமே பயமில்லை.
அவன் நகர்ந்ததும்...
நல்லவேளை... மூச்சை அடக்கிட்டு இருந்தேன்.
பையில் இருந்த அம்மாவின் செல்போனை எடுத்து...
ஹலோ... போலீஸ்! அழகர்மலைக் காட்டுல தீவிரவாதிங்க இருக்காங்க...


விரைவில் சுற்றி வளைத்த போலீஸ்...
தீவிரவாதிகளை கைது செய்தது.
மறுநாள் நாளிதழ்களில்...
தின வெடி
வீரச்சிறுவன் தனியால் பத்து தீவிரவாதிகள் பிடிபட்டார்கள்
ஆண்டுத் தேர்வு முடிந்து ரிஸல்ட் வந்தது. மாநிலத்திலேயே முதலாவதாக தேறியிருந்தான்.
கவி, உனக்கு ரெண்டு விருது தரப் போறாங்களாம்.
வீரச்செயல், முதல் மதிப்பெண். இந்த இரண்டுக்கும் தனித்தனி விருதளித்து பாராட்டினார் அமைச்சர்!
நன்றி ஐயா!
வாழ்த்துக்கள் கவி!



பெயர் : ....

முகவரி : ....


....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032






மிளகாய் ஏன் காரணமாக இருக்கிறது? அதில் 'காப்சைசின்' என்னும் வேதிப் பொருள் உள்ளது. அதற்கு நிறமும் கிடை யாது. மணமும் கிடையாது. ஆனால் மிள காய்க்கு காரம் கொடுப்பது அதுதான்.

எல்லா மிளகாய்களிலும் ஒரே அள வான காரம் இருக்குமென்று சொல்ல முடி யாது. அது மிளகாய்க்கு மிளகாய் மாறு

ஊமத்தைப் பூவின் மேல்புறம் வண் ணத்திலும், உட்புறம் வெண்மையாகவும் இருப்பதேன்?

ஊமத்தைப் பூவின் மேற்புறத்தில் 'ஆந் தோசையனின்' என்ற நிறமியுள்ளதால், அது இளம் ஊதா நிறமாகக் காணப்படுகின்றது.



பேருந்தில் செல்லும்போது படிப்ப தைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில், அப்போது படிக்கும் பொருளுக் கும் கண்ணிலுள்ள லென்சுக்கும் இடையே உள்ள தூரம் அடிக்கடி மாறு படுகிறது. இதனால் கண்ணின் தக வமைப்பு நேரம் மாறுபட்டு கண்ணிற்கு அழற்சியும் தீங்கும் ஏற்படுகிறது. நாம் படிக்கும்போது ஒருவிதமான வெளிச்சம் தேவைப்படுகிறது. பேருந்தில் வெளிச்சத் தின் அளவு மாறும்போது கண் பாவை யின் விட்டம் அடிக்கடி மாறுகிறது. இத னால் தலைவலி போன்ற தொல்லைகள் ஏற்படுகின்றன.

- ப.ஜெயக்குமார், பதினொன்றாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

நீரில் வாழும் மீன் தரையில் விழுந்தால் உடனே துடித்து இறந்து விடுகிறதே, அது ஏன்? நீர்ப்பரப்பில் வாழும் மீன் மீது அதிகபட்ச காற்றழுத்தம் விழுகிறது. சுமார் ஒரு கிலோ மீட்டர் பரப்புள்ள நீரில் வாழும் ஒரு மீனின் மீது, சுமார் ஒரு டன் எடையுள்ள காற்று அழுத்துகிறது. இப்படி வாழும் மீனைத் தரையில் போட்டால், அந்தக் காற்றழுத்தம் குறைந்துவிடும். அதனால் மீன் இறந்து விடுகிறது.

- ப.அன்வர் உசேன், தஞ்சை

படும். ஒரே செடியில் வளர்ந்த மிளகாய்களிலேயே ஒரே மாதிரியாக காரம் இருப்பதில்லை. குடை மிளகாயில் 'காப்சைசின்' என்னும் வேதிப் பொருள் இல்லை.

- எஸ்.டில்லிபாபு, பத்தாம் வகுப்பு, காஞ்சிபுரம்







மேற்கூறிய நிறமி இல்லாத மற்ற இடங்கள் வெள்ளை நிறமாக அமைந்துள்ளன.

- க.அபிஷேக், சென்னை

ஏன்?


திடீரென எழுந்திருக்கும்போது தலைச் சுற்றல் ஏற்படுகிறது. இது எதனால்? ஒவ்வொரு தடவை படுத்திருந்தோ அல்லது உட்கார்ந்திருந்தோ எழுந்திருக்கும் போது, காலில் உள்ள ரத்தக் குழாய்கள் இதயம் மற்றும் தலையை நோக்கி ரத்தத்தை செலுத்துவதற்காக சிறிது இறுக்கமாகின்றன.

வேகமாக எழுந்திருக்கும்போது ரத்தக் குழாய்கள் போதுமான அளவு வேகமாகச் சுருங்காததால், கால் பகுதியில் அதிக ரத்தம் இருக்கும்.


தலைப்பகுதிக்கு குறைந்த அளவே ரத்தம் செல்லும். இதனால் தலைசுற்றல் ஏற்படுகிறது. மெதுவாக எழுந்திருப்பதால் கால்களில் உள்ள ரத்தக் குழாய்கள் சுருங்குவதற்கு போதுமான நேரம் கிடைப்பதுடன், தலைசுற்றல் ஏற்படுவதையும் தவிர்க்க முடியும். தலைசுற்றல் ஏற்பட்டால் கீழே உட்கார்ந்து, தலைசுற்றல் குணமான பின் எழுந்திருக்க வேண்டும்.

- எஸ்.தணிகைவேல், பதினொராம் வகுப்பு, சே.சா.மு.ந.மே. நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்






நா.ஜனார்த்தனம்,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மே.நி. பள்ளி,
நம்பியூர்



பி.மகேஸ்வரி,
ஏழாம் வகுப்பு,
கஸ்தூரிபா காந்தி
பாலிகா வித்யாலயா,
சின்னமதூர்

உங்கள் கைவண்ணம்!




டி.எஸ்.வைஷ்ணவி,
ஏழாம் வகுப்பு,
வித்யாவிஹார் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
திருச்செங்கோடு






ஏ.சாந்தி,
பதினொராம் வகுப்பு,
சுப்பையா வித்யாலயா பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி



காயத்ரி சிவகுமார்,
ஆறாம் வகுப்பு, டெலியா
இங்கிலீஷ் பிரைமரி பள்ளி,
ஹாங்காங்



படுகின்றன.

✱ ஆஸ்திரேலியாவில் வோட்டுப் போடாதவர்கள் அபராதம் செலுத்த வேண்டும்.

✱ இந்தியாவில் முதன் முதலாக செய்திப்படம் உருவாக்கிய தமிழர் ஏ.கே.செட்டியார்.

✱ கின்னஸ் புத்தகம் 46 நாடுகளில் 37 மொழிகளில் வெளிவருகிறது.

✱ நைலான் துணியில் நோட்டுகளை அச்சடிக்கின்ற நாடு மேற்கு ஜெர்மனி.

To Insure Prompt Service என்கிற வார்த்தையின் சுருக்கமே Tips. இங்கிலாந்தில் உருவாகி இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளது.

✱ பில்லியர்ட்ஸ் விளையாட்டிற்குரிய பந்துகள் செய்ய 600 யானைகள் ஆண்டிற்கு ஒருமுறை கொல்லப்

- ஆர்.லதா,
திருவாரூர்


கோபம் வந்தால்



1. எலிகள் நிமிடத்துக்கு சராசரியாக 130 தடவை சுவாசிக்கும்.

2. ஒரு யூனிட் இரத்தம் என்பது 320 மில்லி லிட்டர்.

3. நீர் யானைக்கு கோபம் வந்தால் கொட்டாவி விடும்.





கதம்பம்



POLICE என்பதன் விரிவாக்கம் Protection of Life in Civil Establishment.

* தண்ணீரை 'நீலத் தங்கம்' என்று சொல்கிறார்கள்.
* 'கடல் தங்கம்' என்று அழைக்கப் படுவது சுறா மீன்கள்
* எகிப்தில் 'வெள்ளை தங்கம்' என்று பருத்தியை கூறுவர்.
* சுத்தமான தங்கத்தை கையால் பிசையலாம்.
* 'திரவத் தங்கம்' என்று கூறப்படுவது பெட்ரோலியம், மண்ணெண்ணெய் ஆகும்.

- ஞா.ரம்யா, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி

கொட்டாவி!



4. தலைகீழாக தொங்கும் ஒரே பாலூட்டி - வெளவால்

5. தட்டச்சு இயந்திரம் 1873ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

- எஸ்.டில்லிபாபு, பத்தாம் வகுப்பு,
சி.எஸ்.எம்.நகராட்சி மேல்நிலைப் பள்ளி, பிள்ளையார்பாளையம்,
காஞ்சிபுரம்



இனிக்கும் இளநீர்!

காற்றில் ஓலை சலசலக்கக்
கதிரோன் ஒளியில் பளபளக்க
ஆற்றின் கரையில் வயல்வெளியில்
அழகாய் வளரும் தென்னைமரம்

தாளால் நீரைத் தானுண்டு
தழைத்து வளர்ந்து மிகநன்றே
தலையால் சுவைசேர் இளநீரை
தவறாது அளிக்கும் தென்னைமரம்

முற்றிப் போன இளநீரே
முக்கண் கொண்ட தேங்காயாம்
நெற்றென இதனை நிலம்மீது
நித்தம் கூறி வருகின்றோம்.

தென்னை மரத்தின் ஓலையிலே
சிறந்த பாய்கள் முடைந்திடலாம்
தென்னங் குச்சி கள்ஒன்றாகச்
சேர்த்துத் துடைப்பம் செய்திடலாம்.

தென்னம் பழமாம் தேங்காய்நம்
தேவை யான பொருளன்றோ?
உண்ணும் உணவின் சுவையினையே
உயர்த்திக் காட்டும் அதுவன்றோ?

தேங்காய் ஓட்டைக் கொண்டுபல
தினுசாய் அகப்பை செய்திடலாம்
தேங்காய் தன்னில் இருந்தேதான்
சிறந்த எண்ணெய் கிடைக்கிறதே.

தென்னங் குருத்து தனைச்சீவிச்
சிறந்த தோரணம் ஆக்கிடலாம்
இன்னும் தென்னை மரத்தாலே
எய்தும் பயன்கள் பலவாகும்.

தண்ணீர் சிறிதே ஊற்றிடினும்
தளர்வே இன்றிப் பயன்தருமே
மண்ணில் தென்னை மரம்போல
வாழ்ந்தே உதவி செய்வோமே.

கவிஞர் சாரதிதாசன்







குடுகுடுப்பைக்காரன்!

குடு குடுப்பை ஓசையில்
குழந்தைக் கூட்டம் கூடுதாம்
குடுகுடுப்பைக் காரனின்
கோலம் கண்டு மகிழுதாம்

வண்ணத் தலைப்பா மிடுக்குடன்
வளைந்து போன மீசையாம்!
நல்ல சேதி சொல்கிறான்
நாமும் கேட்டு மகிழ்கிறோம்

வீடும் பணமும் பெருகுமாம்
விவர மாகச் சொல்கிறான்
பாடு படுத்தும் துன்பங்கள்
பறந்து போகும் என்கிறான்

வறுமை ஒழிந்து வீட்டிலே
வளமை பெருகும் என்கிறான்
பொறுமை யோடு இருப்பதால்
பெருமை கூடும் என்கிறான்

மனம் மகிழ்ந்து கொடுப்பதை
முகம் மலர்ந்து வாங்குவான்
குடு குடுப்பை ஓசையில்
குழந்தை நெஞ்சில் ஆடுவான்.

- காளிமுத்து, திருநெல்வேலி

பறவை இறகு!

பறந்து போகும் பறவைகளே
சிறகைத் தாருங்கள்!
பறக்கப் பழக ஆவல் மிகுதே
சீக்கிரம் வாருங்கள்!
பரந்த வானை அங்கும் இங்கும்
பார்த்திட வாருங்கள்!
பாசம் என்பது மிகவும் பெரிது
பழகிட வாருங்கள்!
கறந்த பாலைப் போலே வெள்ளை
மேகம் பாருங்கள்!
கற்பனை முத்துகள் நட்சத் திரமோ
கண்டே கூறுங்கள்!
பிறந்த மகவாய் அழகைச் சிந்தும்
நிலவைப் பாருங்கள்!
பிரியம் காட்டி இன்னொரு வாட்டி
ஒன்றாய்ச் சேருங்கள்!

- வெ.தமிழழகன்,
சேலம்







''டாக்டர் என் கண்ணுல பூ விழுந்து இருக்கு.''

''எங்க வாசனையே வரலையே.''

- க.இராஜசேகர், திருவண்ணாமலை



''ஏன்டா... பாம்புன்னு எழுதச் சொன்னா பம்புன்னு எழுதறே..''

''நீங்கதானே ஸார் சொன்னீங்க. பாம்புக்கு கால் இல்லையின்னு.''

- இரா.கணேசன், சேலம்

என்ன காலம்?



''வெண்ணையைத் தூக்கி மேலே வீசினால் என்ன ஆகும்?''

''தெரியலையே...''

'' 'பட்டர் ஃபிளை' ஆகும்!''

- ஒய்.ரவிராகுல், ஈரோடு






கோகுலம் டைஜஸ்ட்

உள்ளே...

- 'வில்லோ' மரம் எதற்கு பயன்படும்? - 34
- புதுவீட்டுக்கு வந்த மான் - 36
- ஒலிம்பிக் தோன்றிய இடம் - 38
- இளஞ்சிவப்பு நகரம் - 40
- 'நாக்டர்னல்'னா என்ன? - 42
- ஸ்கூல் கலாட்டா - 44
- 'பாட்னா'வின் பழைய பெயர் - 46




* உலகெங்கும் இரவும் பகலும் சமமாக இருப்பது செப்டம்பர் 23ஆம் தேதியும், மார்ச் 21ஆம் தேதியும்தான்.

* நம் உடலில் உள்ள மிகச் சிறிய எலும்பு ஸ்டேபிஸ் என்பதாகும். இது நடுச் செவியில் உள்ளது.


* கழுத்தை முழு வட்டப் பாதையில் 260 டிகிரி கோண கதியில் சுழற்றும் தன்மை ஆந்தைக்கு மட்டுமே உண்டு.

* கிரிக்கெட் விளையாட்டு மட்டை 'வில்லோ' என்ற மரத்திலிருந்தும், பூப்பந்து விளையாட்டு மட்டை 'ஆஷ்' என்ற மரத்திலிருந்தும் தயாரிக்கப்படுகின்றன.

- ஆர்.மதுமதி, மதுரை







* ஆமைக்குப் பற்கள் கிடையாது. கனத்த ஈறு போன்ற அமைப்பாலேயே அது உணவைக் கடித்து விழுங்குகிறது.

* பிற பறவைகளைப் போல ஆந்தை பறக்கும்போது படபடவென்று சிறகொலி கேட்காது. பெரும்பாலும் இரவு நேரத்தில் இரை தேடப்போகும் ஆந்தை, பறக்கும்போது சிறகடிக்கும் ஒலி கேட்டு இரை தப்பித்து விடாதபடி இயற்கை தந்த வரம்.





* ஒரு திராட்சை கொடி காய்க்கத் துவங்கி இருபது ஆண்டு காலம் வரை பலன் தரக்கூடியது.

* விண்வெளிக் காலம் துவங்கிய ஆண்டு 1957.

பொது அறிவு

எட்டு வகையான ஆண்டுகள்

லூனார் வருடம் - *354 நாட்கள்*
பொதுவான வருடம் - *365 நாட்கள்*
லீப் வருடம் - *366 நாட்கள்*
ஜூலியன் வருடம் : *365¼ நாட்கள்*



சோலார் வருடம் - *365 நாட்கள், 5 மணி, 48 நிமிடம், 46 நொடிகள்*
கிரிகோரியன் வருடம் - *365 நாட்கள், 5 மணி, 49 நிமிடம், 12 நொடிகள்*
அனோமாலிஸ்டிக் வருடம் - *365 நாட்கள், 6 மணி, 13 நிமிடம், 19.3 நொடிகள்*
சிடேரியல் வருடம் - *365 நாட்கள், 6 மணி, 13 நிமிடம், 19.3 நொடிகள்*

- அதிபன் அன்புமணி,
உ. எண் : 120, ஈரோடு

எலிமான்

எலிமான் என்பது பாலூட்டிகளில் ஒரு விலங்கு. இது அளவில் ஒரு பெரிய எலியைப் போலிருக்கும். ஆனால் உருவ அமைப்பில் மானைப் போலிருக்கும். இவற்றின் இரைப்பையில் மூன்று அறைகள் இருக்கும். ஆண் இனங்களுக்குத் தந்தம் போல் இரண்டு நீண்ட கோரைப் பற்கள் உள்ளன. அபூர்வமான இந்த எலிமான்கள் இந்தியக் காடுகளிலும் இலங்கையிலும் காணப்படுகின்றன. இவற்றுக்குக் கொம்புகள் கிடையாது.

- பா.விக்னேசுவரன்,
குட்டம்



✱ கட்டை வண்டி பற்றியே ஒருவர் நீண்ட ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். பத்மபூஷன் விருதுபெற்ற இவர் பெயர் என்.எஸ்.ராமசாமி.

✱ நிலவுக்கு மனிதன் சென்று காலடி பதித்த நாள் ஜூலை 20, 1969. அந்த நாள் உலகம் முழுவதும் விஞ்ஞானிகளால் கொண்டாடப்பட்டு வருகிறது.

- ப.அன்வர் உசேன், பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுக்கூர்

பார்வை!

நான்கு அடுக்குகளைக் கொண்டது அந்த மாடி வீடு. அந்த வீட்டின் கீழ்ப்பகுதியில் ஒரு சேவல் வசித்தது. தினமும் வயிறு முட்டச் சாப்பிடுவதும், தூங்குவதுமாக பொழுதைக் கழிப்பதுதான் அதன் வழக்கம்.

முதல் தளத்தில் ஒரு குயில் இருந்தது. காணாமல் போன தன் குஞ்சுகளைத் தேடுவதும், அந்தக் கவலையில் சோகமாகப் பாடுவதுமாக இருக்கும் அந்தக் குயில். இரண்டாவது தளத்தில் ஓர் அணில் வசித்தது. அலைந்து திரிந்து கொட்டைகளை சேகரித்துக் கொண்டு வருவதும், அவற்றை கொறித்துக் கொண்டே இருப்பதும்தான் அணிலின் வேலை. என்றாலும், மூவரும் நல்ல நண்பர்களாக வாழ்ந்தார்கள்.

மூன்றாவது தளம் காலியாக இருந்தது. அந்த இடத்துக்கு வாடகைக்கு பலர் வந்து பார்த்தார்கள்.

முதலில் வந்த எறும்புக்கு வீடு பிடித்திருந்தது. அதை அறிந்த நண்பர்கள், சுறுசுறுப்பான எறும்பு, தங்களோடு தங்கப்போவதாக எண்ணி மகிழ்ந்தனர். ஆனால், எறும்பு சொன்னது : 'எப்போது பார்த்தாலும் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிற சோம்பேறி சேவல் உள்ள இடத்தில் நான் இருக்கமாட்டேன்.''

அதைக் கேட்ட நண்பர்கள் மூவரும் வருந்தினார்கள். அடுத்து ஒரு முயல், தன் குட்டிகளுடன் வந்தது

வெள்ளை வெளேரென்று அழகாக இருந்த முயலையும், குட்டிகளையும் பார்த்த நண்பர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

முயலும் வீட்டைச் சுற்றிப் பார்த்து சந்தோஷப்பட்டது. "வீடு அழகாக இருக்கிறது. நல்ல காற்றோட்டமாக இருக்கிறது. ஆனாலும் எனக்கு வேண்டாம்'' என்றது முயல். காரணம் புரியாமல் குழம்பினர் நண்பர்கள் மூவரும். முயல் தொடர்ந்து சொன்னது.

"இந்தக் குயில் காலநேரம் தெரியாமல் சோகமாய் பாடிக்கொண்டே இருக்கிறது. நானும் என் குழந்தைகளும் எப்படித் தூங்குவது? அதனால் நான் தங்கமாட்டேன்'' என்று கிளம்பியது முயல்.

பிறகு, ஒரு வானம்பாடி வந்தது.


இரா. பிரதீப்குமார்

பதினொன்றாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்பள்ளி,
நம்பியூர்.

குட்டிக்கதை

அதற்கும் வீடு பிடித்திருந்தது. ஆனாலும், "இந்த வீடு வேண்டாம்" என்றது. ஏன் என்றவுடன், "இந்த அணில் எப்போதும் கொட்டைகளை கொறித்து சப்தம் உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது. இந்த இடத்தில் தங்கினால், என்னால் சந்தோஷமாகப் பாட முடியாது" என்றது வானம்பாடி.

வீட்டைப் பார்க்க வந்த மூன்று பேருமே, வாடகைக்கு வரவில்லையே என்று வருந்தினர் நண்பர்கள். அது மட்டுமல்ல; தங்களுடைய இயல்பு அவர்களுக்குப் பிடிக்க வில்லை என்பதாலும் கலங்கினர்.



அப்போது ஒரு புள்ளிமான் தன் குட்டிகளோடு வந்தது. அந்த மானின் அழகையும், குட்டிகளையும் பார்த்து நண்பர்கள் மகிழ்ந்தனர். ஆனாலும், இது எங்கே தங்கப் போகிறது என்றும் நினைத்தனர்.

வீட்டைப் பார்த்துவிட்டு மான் சொன்னது : "நான் இங்கே தங்கிக் கொள்கிறேன். எனக்குப் பிடித்திருக்கிறது" நண்பர்கள் வியந்தனர். "நிஜமாகவா?" என்றனர்.

"நிஜம்தான்" என்றது மான்.

"எங்களைப் பிடித்திருகிறதா?" என்றது சேவல்.

"ம்... அழகான கொண்டை உள்ள சேவல், குஞ்சுகள்மீது பாசம் கொண்டு தேடும் குயில், கறுகறுப்பான அணில்... என்று உங்கள் மூவரையுமே எனக்குப் பிடித்திருக்கிறது" என்றது மான்!

'நல்லதை மட்டுமே பார்க்கும்' மானின் குணம், அவைகளுக்கும் பிடித்துப் போனது. அந்த வீட்டுக்குள் மட்டுமல்ல; அவர்களின் மனத்திலும் மான் இடம் பிடித்துக் கொண்டது.



அசுரப் புத்தகக் கடை!

லண்டனில் உள்ள ஃபாயில் என்பவரது பழைய புத்தகக்கடை, உலகப் பிரசித்தி பெற்றது! புத்தக அலமாரிகள் மட்டும் 40 மைல் நீளத்துக்கு இருக்கின்றன. 600 பேர் பணிபுரிகின்றனர்! உலகின் பல மூலைகளிலிருந்து வரும் ஆர்டர்களுக்கு உடனடியாகப் புத்தகங்களை அனுப்பி வைக்கின்றார். ஃபாயில், இந்த கடையின் முக்கிய வாடிக்கையாளராகத் திகழ்ந்தவர் வால்ட் டிஸ்னி!

- எம்.சிவரஞ்சனி, உ. எண் : 178, இரண்டாம் வகுப்பு, ஸ்ரீ மகாதேவகுருஜி, மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்


சுறுசுறுப்பான பாலம்

உலகின் சுறுசுறுப்பான பாலம், கல்கத்தாவின் ஹூக்ளி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள, 'ஹௌரா பாலம்' ஆகும். காரணம் அதன்மீது தினந்தோறும் 57 ஆயிரம் வாகனங்கள் செல்கின்றன! கணக்கிலடங்கா பயணிகள் செல்லும் இப்பாலம், 15 ஆயிரம் அடி நீளமும், 75 அடி அகலமும் உடையதாகும்.



✸ வோல்கா நதி

பாலைவனம்



✸ ஹௌரா பாலம்

ஐரோப்பாவை பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள் :

✸ ஐரோப்பாவின் மிக முக்கிய நாடாகத் திகழ்வது இங்கிலாந்து.

✸ ஐரோப்பாவில் இருக்கும் 'கிரீஸில்'தான் தான் உலகப் புகழ்பெற்ற விளையாட்டுப் போட்டியான ஒலிம்பிக் தோன்றியது.

✸ ஐரோப்பாவில் மக்கள் நெருக்கடி மிகுந்த நாடு பெல்ஜியம்.

✸ ஐரோப்பாவின் மிகப் பெரிய நதி 'வோல்கா'.

பச்சோந்தி

பச்சோந்தி மடகாஸ்கர் தீவில் அதிகம் காணப்படுகிறது. பச்சோந்தி பயமோ, பரபரப்போ ஏற்படும்போது மங்கலாகவோ, மஞ்சள் புள்ளிகள் கொண்டதாகவோ மாறுகின்றது. கோபம் கொள்ளும்போது கறுப்பு நிறமாகவும், சூரிய ஒளி இல்லாத வெப்பமான சூழ்நிலையில் பச்சையாகவும் இருக்கின்றது.

பச்சோந்தி நிறம் மாறுவதற்கு இதன் தோலுக்கு அடியில் உள்ள கண்ணாடி போன்ற ஏராளமான செல்களே காரணம். இதில் நிறம் கொடுக்கும் மஞ்சள், கறுப்பு, சிவப்பு நிறமிகள் உள்ளன. செல்லில் உள்ள இந்த பொருட்கள் நிறமாற்றத்தைக் கொடுக்கின்றன. இவை சுருங்கி விரியும்போது நிறமாற்றம் ஏற்படுகிறது.

பச்சோந்தி ஒரு கண்ணால் ஒரு இடத்தையும், மற்றொரு கண்ணால் வேறொரு இடத்தையும் பார்க்கும்.

குள்ள பச்சோந்திகள் அதிகபட்சமாக 5 செ.மீ. நீளம் வரையே வளர்கின்றன. மரத்தின் இலைகளில் பச்சோந்திகள் வசிக்கும். இவற்றின் உணவு இலைகளில் வந்து உட்காரும் பூச்சிகளேயாகும்.

- எஸ்.சுப்ரியா, உ. எண் : 79, சென்னை



இல்லாத கண்டம்!

✱ ஐரோப்பாவில் உள்ள அனைத்து நாடுகளிலும் பாலை வனமே கிடையாது.

- ஆர்.பிரணவராஜ், ஒன்பதாம் வகுப்பு, உறுப்பினர் எண் 356, கிறிஸ்ட் தி கிங் மேனிலைப் பள்ளி, கும்பகோணம்

நாணயங்கள்

அமெரிக்கா - டாலர்
ஆஸ்திரேலியா - ஆஸ்திரேலிய டாலர்
இந்தோனேஷியா - ருபியா
சுவிட்சர்லாந்து - சுவிண்டிராங்க்
எகிப்து - எகிப்து பவுண்டு
கனடா - கனடா டாலர்
இலங்கை - ருப்பி
இஸ்ரேல் - ஹேறகேல்
இத்தாலி - யூரோ
இந்தியா - ரூபாய்
சீனா - யென்
நார்வே - குரோனர்

- ம.சுந்தரலெட்சுமி, எட்டாம் வகுப்பு, உ. எண் : 404, மதுரை





* சான்பிரான்சிஸ்கோ



* ஜெய்ப்பூர்



* மஞ்சளாறு

பொற்கதவு நகரம்!

தூத்துக்குடியை 'முத்து நகர்' என்கிறோம். கொச்சியை 'அரபிக் கடலின் அரசி' என்கிறோம். அதுபோல, 'அடைமொழி'களால் அடையாளப்படும் சில இடங்களை அறியலாம்.

தாமோதர் நதி - வங்காளத்தின் துயரம்
சான்பிரான்சிஸ்கோ - பொற்கதவு நகரம்
ஆப்பிரிக்கா - இருண்ட கண்டம்
அயர்லாந்து - மரகதத் தீவு
பெங்களூரு - இந்தியாவின் பூந்தோட்டம்
பாபெல்மண்டப் - கண்ணீர்க் கதவு
எகிப்து - நைல் நதியின் நன்கொடை

அடைமொழி



* தாமோதர் நதி



* நைல் நதி



* சிகாகோ

பஹ்ரைன் - முத்துத் தீவு
ஸ்காட்லாந்து - ரொட்டி நாடு
ஜெய்ப்பூர் - இளஞ்சிவப்பு நகரம்
பாமீர் - உலகத்தின் கூரை
மும்பை - ஏழு தீவுகள் நகரம்
மஞ்சள் ஆறு - சீனாவின் துயரம்
சிகாகோ - உலகின் தோட்ட நகரம்

- ஆர்.ஜனனி, உ. எண் : 181,
ஆறாம் வகுப்பு, ஏ.ஜி.எம்.
மேல்நிலைப் பள்ளி, ஏரகுடி

தூங்கிக்கொண்டே இருப்பவர்களை 'கும்பகர்ணன்' என்று சொல்வோம். அதே மாதிரி, 'காட்டின் கும்பகர்ணன்' என்று கரடியைச் சொல்லலாம். பெரிய தலையுடன் சிறிய கண்களும், வட்டமான காதுகளும், வலிமையான கால்களும் கொண்டது கரடி! அதன் பாதம் குட்டையாகவும் அகலமாகவும் ஐந்து விரல்களோடும் இருக்கும்.



காட்டின் கும்பகர்ணன்!

சிவப்பு பாண்டா கரடிகள் தவிர, மற்ற கரடிகளுக்கு குட்டி வால் இருக்கும். ஆனால் அது பெரும்பாலும் வெளியே தெரியாது. இரண்டு கால்களால் நடக்க முடிந்தாலும், நான்கு கால்களாலேயே நடக்கும்.

பொதுவாக, கரடிகள் மற்ற விலங்குகளுடன் சேராமல் தனியாகவே வாழும். கரடிகள் பாறைப் பகுதிகளுக்கு நடுவிலோ, அடியிலோ அல்லது குகை போன்ற இடங்களிலோ குளிர்ச்சியான நாலைந்து இடங்களை தேர்வு செய்து வைத்திருக்கும். தேவையான அளவு உணவு கிடைத்ததும், எந்த இடம் அருகில் இருக்கிறதோ அங்கே தங்கி ஓய்வெடுக்க துவங்கிவிடும்.

கர்ப்ப காலத்தில் மட்டும்தான் ஆண்-பெண் கரடிகள் சேர்ந்து இருக்கும். அப்போதுதான் அவைகளுக்கேற்ற உணவு எளிதாய் கிடைக்கும். தேவையான அளவு உணவு, வெயில், மழையில் இருந்து காத்துக் கொள்ளும் வகையிலான காட்டுப் பகுதிகளில் எல்லாம் கரடிகள் வாழும்.

சூரியன் மறையத் தொடங்கும் போதுதான் கரடிகள் வேட்டைக்குச் செல்லும். இந்த மாதிரி விலங்குகளை 'நாக்டர்னல்' விலங்குகள் என்று சொல்வார்கள். குளிர்காலத்தில் வெதுவெதுப்

கட்டுரை

பான இடத்தை தேடிப்போய் நெடுந் தூக்கத்தில் ஆழ்ந்துவிடும். இதைத்தான் 'ஹைபர்னேஷன்' அதாவது winter sleep என்று சொல்வார்கள்.

இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் கரடிகள் காணப்படுகின்றன. கரடிகளுக்கு பார்க்கும் திறன் குறைவு. ஆனால் நுகர்வுத் திறன் அதிகம். இவைகள் அனைத்துண்ணிகள், அதாவது சைவம் அசைவம் இரண்டையும் வெளுத்துக் கட்டும்.

இவைகள் பழங்களையும் சின்னச் சின்ன பூச்சிகள், வண்டுகளைக் கூட உண்ணும் பழக்கம் உடையவை. இவை கரையான்களை விரும்பி உண்ணும். அதேபோல, கரடிகளுக்கு தேன் மிகவும் பிடிக்கும்.

கடுமையான கோடை காலத்தில்தான் கரடிகள் இணை சேரும். ஏழு மாத காலம் முடிந்ததும் அதாவது டிசம்பர், ஜனவரியில் குட்டிக் கரடிகள் பிறந்துவிடும். அம்மா இரை தேடிப்போகும்போது, அப்பா கரடி தான் குட்டிக் கரடியை பார்த்துக் கொள்ளும். கொஞ்சம் வளர்ந்த பிறகு, அம்மாவின் முதுகில் உப்பு மூட்டை ஏறிக்கொண்டு இரை தேடப் போகும்.



கரடிகள் பாலூட்டிகள். சுமார் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரை குட்டிகள் அம்மாவின் பராமரிப்பில் இருக்கும். பழக்கப்பட்ட கரடிகள் 40 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

இந்தக் கரடிகளுக்கு எப்படி ஆபத்துகள் வரும்? சில சமயங்களில் சிங்கம், புலி, சிறுத்தை போன்ற விலங்குகளாலும், காட்டோரத்தில் உள்ள கிராம விவசாயிகள் தோட்டங்களில் அமைக்கும் மின் வேலிகள் மற்றும் வெடிகளாலும் கரடிகள் பலியாகின்றன.

கரடிகளை காட்டிலிருந்து பிடித்து வந்து சர்க்கஸ்களில் பயன்படுத்துகின்றனர். அவற்றை இரண்டு கால்களால் நடக்கவும், சைக்கிள் ஓட்டவும் பழக்கப்படுத்துவர்.

பொதுவாகவே காடுகள் அழிவதனால் மற்ற விலங்குகளைப்போல கரடிகளுக்கும் ஆபத்து அதிகம். பழுப்புக் கரடி, இமயமலைக் கருப்புக் கரடி, சிவப்பு பாண்டா கரடி ஆகியவை மிகக் குறைவான எண்ணிக்கையில் உள்ள அரிய வகைக் கரடிகள் ஆகும்.

- அ.வி.அஜிதாபாரதி,
பதினொன்றாம் வகுப்பு,
ஏ.கே.டி. அகாடமி மெட்ரிக்
மேனிலைப் பள்ளி,
கள்ளக்குறிச்சி



நானும் எனது தோழிகளும் சிறிது நேரம் விளையாடி விட்டு ஒரு வேப்ப மரத்தின் அடியில் அமர்ந்தோம்.

அப்போது ஒரு தோழி -

"எங்க பக்கத்து வீட்ல ஒரு கஞ்சன் இருக்கார். படிக்காதவர். துவைச்சா சோப்பு செலவாயிடும்னு, எப்போதும் அழுக்கு வேட்டி சட்டையுடன்தான் இருப்பார். ஒரு நாள் அவரோட பையன் ஸ்கூல்லே இருந்து அழுது கிட்டே வந்தான். ஏன்டான்னு அவர் கேட்டாரு. 'உனக்கு அறிவு இருக் கான்னு கேட்டு வாத்தியார் என்னை அடிச்சிட்டாருப்பா'ன்னு பையன் சொன்னான். உடனே அவர் 'இல் லேன்னு சொல்ல வேண்டியது தானேடா மடையா'ன்னு கத்தினார். சொல்லிவிட்டு தோழி சிரிக்க... எங் களாலும் சிரிப்பை அடக்க முடிய வில்லை.

- அ.அனீஸ் ஃபாத்திமா, உ. எண் : 34, பதினோராம் வகுப்பு, சிசம் மெட்ரிக் மே.நி. பள்ளி, தேனி

சேட்டைகள்


அன்று, ஆசிரியர் சற்று தாமதமாக வந்தார்; பாடம் நடத்த ஆயத்தமானார். பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது, சுரேஷ் எழுந்து "ஸார் நீங்க சொன்னது எனக்கு விளங்கவில்லை" என்றான். அதற்கு ஆசிரி யர் "விளக்குமாற்றால் விளக்குவோம்" என்றார். அதைக்கேட்ட சுரேஷ், கோபம் பொங்க "ஸார், புரியலைன்னு கேட்டுட் டேன். அதுக்காக நீங்க என்னைய விளக்குமாத்தால அடிப்பேன்னு சொல்லக் கூடாது ஸார்" என்றான். அதைக்கேட்ட ஆசிரியர், "விளக்குமாற்றால் விளக்குவோம் என்றால், அதை வேறு விளக்கத்தின் மூலம்

எங்களுக்கு இங்கிலீஷ், மேத்ஸ் இரண்டுக்கும் ஒரே மாஸ்டர் தான். அவர் காலையில் முதல் பீரியட் - இங்கிலீஷ் நோட்டும், நாலாவது பீரியட் - மேத்ஸ் ஹோம் ஒர்க் நோட்டும், பார்த்துக் கையெழுத்திடுவார். ஒரு நாள் முதல் பீரியட் - இங்கிலீஷ் வகுப்பில் - ஒரு மாணவி நோட்டின்றி நின்றாள். "எங்கே உன் நோட்டு"



உனக்கு விளங்குமாறு விளக்குகிறேன் என்று பொருள்'' என்றார் புன்னகை யுடன்! அதைக் கேட்டவுடன் வகுப்பே கலகலகத்துப் போனது.

- ம.சௌமியா,
மதுரை



பலவிதம்!

என்று கேட்ட அவரிடம், ''அதை, மேத்ஸ் நோட்டோடு சேர்த்து, வீட்லயே வச்சிட்டு வந்துட்டேன் சார்!'' என்றாள் அவள். நாங்கள் எல்லோரும், கொல்லென்று சிரித்து விட்டோம். மாஸ்டர் கோபமாக, ''ஓகோ, கடைசி பீரியடும் நோட்டு இல்லேன்னு இப்பவே சொல்லுறியா?'' என்று கோபித்தார். நாங்கள் 'கப்சிப்'பானோம்.

- டி.தாமினி, ஏழாம் வகுப்பு,
மஹரிஷி வித்யா மந்திர்
மெட்ரிக் பள்ளி,
திருவண்ணாமலை


ஸ்கூல் கலாட்டா

என் அம்மா ஸ்கூல் டீச்சர். அவுங்க கிளாஸ்ல நடந்த விஷயம் இது.

ஒரு பையன் எப்பவும் படிக்கவே மாட்டானாம். அவன் பேர் அறிவானந்தம். ஒரு நாள், ''ஏம்பா, நீ பிறந்தபோது உங்கம்மா, அப்பா நம்ம பையன், அறிவோட ஆனந்தமா வாழணும்னு நினைச்சு அறிவானந்தம்னு உனக்கு பேரு வச்சிருக்காங்க. நீ இப்படி படிக்காம இருக்கியே''ன்னு வருத்தத்தோட கேட்டாங்களாம். உடனே, அவன் பக்கத்தில இருந்த ஒரு சுட்டிப் பையன் ''டீச்சர் அதுக்காக மட்டி மடையன்னு பேரு வைக்க முடியுமா''ன்னு கேட்டானாம். கிளாசில சிரிப்பு சத்தம் அடங்க ரொம்ப நேரமாயிடுச்சாம். கேட்ட எங்களுக்கு சிரிப்பு தாங்கலை.

- நா.வருண், உ. எண் : 1,
அழகப்பா மெட்ரிக் பள்ளி,
காரைக்குடி





* கல்லணை



* மேட்டூர் அணை

அணைக்கு வயது 1800!

பம்பாய், மும்பை ஆனதுபோல், சில நாடுகள் மற்றும் நகரங்களின் பெயர்களும் மாறியுள்ளன. அவை :

பழைய பெயர் - புதிய பெயர்

கிழக்கு வங்காளம் - பங்களாதேஷ்

பெர்சியா - ஈரான்

பனாரஸ் - வாரணாசி

தெற்கு ரோடீஸியா - ஜிம்பாவே

வடக்கு ரோடீஸியா - ஜாம்பியா

பாடலிபுத்திரம் - பாட்னா

ஃபார்மோஸா - தைவான்

மகதம் - பீகார்

கான்ஸ்டான்டி-நோபிள் - இஸ்தான்புல்

மெசபொடோமியா - ஈராக்


அபீஸினீயா - எதியோபியா

பர்மா - மியான்மர்

தென்மேற்கு ஆப்பிரிக்கா - நமீபியா



- ப.இனியன், உ எண் : 35, பனிரெண்டாம் வகுப்பு, ஜெய்கோபால் கரோடியா தேசிய மேல்நிலைப் பள்ளி, சென்னை



தமிழ்நாட்டில் உள்ள அணைகளிலேயே மிகப் பழைமையானது கல்லணை. 1800 ஆண்டுகளுக்கு முன் கரிகாலனால் கட்டப்பட்ட அணை இது. தமிழ்நாட்டிலுள்ள அணைகள் இதோ:

வைகை அணை - மதுரை மாவட்டம்
மணிமுத்தாறு அணை - நெல்லை மாவட்டம்
பாபநாசம் அணை - நெல்லை மாவட்டம்
கல்லணை - தஞ்சை மாவட்டம்
மேட்டூர் அணி - சேலம் மாவட்டம்
பவானி சாகர் அணை - ஈரோடு மாவட்டம்
பேச்சிப் பாறை அணை - குமரி மாவட்டம்
பெருஞ்சாணி அணி - குமரி மாவட்டம்
அமராவதி அணை - கோவை மாவட்டம்
கிருஷ்ணகிரி அணை - தர்மபுரி மாவட்டம்
சாத்தனூர் அணை - திருவண்ணாமலை மாவட்டம்

- ப.எழிலன், சென்னை


* அமராவதி அணை



* சாத்தனூர் அணை


* மணிமுத்தாறு அணை


* பவானி சாகர் அணை


* பாபநாசம்

சிரிப்பலை




''எங்க சார் போறீங்க?''

''எங்க மாமா பையனோட கல்யாணத்துக்கு.''

''அட.. போற இடத்தைச் சொல்லுய்யா.''

- சி.வெங்கடேஷ், உ. எண் : 753, கும்பகோணம்



''நண்பா, எனக்கு முதுகு ரொம்ப அரிக்குது. கொஞ்சம் சொறிஞ்சு விடேன்.''

- கு.புவனேஸ்வரி, உ. எண் : 794, விளாம்பட்டி

கழுதைக்குப் பால்?



''பார்க்ல இருக்கற மரங்கள்ல உங்க பாப்பாவுக்கு பிடிச்ச மரம் எது?''

''அந்த சறுக்குமரம்.''

- வீ.லோகநாதன், கடலூர்



''கழுதைக்கு ஏன் பால் கொடுக்கிற?''

''கழுதை பால் குடிச்சா நல்லதுன்னு டீச்சர் சொன்னாங்க.''

- ஆர்.தங்கராஜ், திருப்பூர்

மூளைக்கு வேலை

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கிடையே உள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!







உலர்ந்த கொம்பில்

I. 1. அப்பன் செந்தலை; ஆத்தாள் முழு மொட்டை; முழு மொட்டை வயித்துக்குள்ளே கொழுக்கட்டை; கொழுக்கட்டை வயித்துக்குள்ளே கீச்சு கீச்சு - அது என்ன?

2.கற்றாழை மடல் நிறத்தாள். வெற்றிலை தின்றறியாள். சொன்னதைச் சொல்வாள். உதடோ சிவந்திருப்பாள் - அவள் யார்?

3. காக்கை போல் கறுப்பு. கையால் தொட்டால் ஊதா. வாயால் மென்றால் நீலம் - அது என்ன?

- ஏ.எஸ்.யோகானந்தம், கோபி

II. 1. ஒற்றைக் கால் மனிதனுக்கு தலை எல்லாம் கறுப்பு - அது என்ன?

2. தலையைச் சீவினால் கண் தெரியும் - அது என்ன?

3.ஒரு நெல் குத்தினால் வீடெல்லாம் உமி - அது என்ன?

- கு.புவனேஸ்வரி, விளாம்பட்டி

III. 1. நாடு உண்டு நகரம் இல்லை; காடு உண்டு மிருகம் இல்லை; கடல் உண்டு மீன் இல்லை - அது என்ன?

2.கசந்திடுவாள் கனகவல்லி, கண்டநோய் ஓட்டிடும் வில்லி - அவள் யார்?

3.தொடாதவரை அசகாய சூரன், குத்துபட்டால் குலை சாய்ந்திடுவான் - அவன் யார்?

- வீ.லோகநாதன், கட்லூர்

IV. 1.உலர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ - அது என்ன?

2. ஊருக்கு ஊர் அடிபட்டு உரியவரிடம் சேருவான் - அவன் யார்?

3.தங்கை தலையிலே பாம்பு - அது என்ன?

- சு.இரா.அகிலா, ஏழாம் வகுப்பு, சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி



விடுகதை

V. 1. கண்ணாடி அணிந்து ஒளி கொடுக்கிறான் - அவன் யார்?

2.ஒற்றைத் தலையன் தலையோ சிறியது; உடலோ பெரிது-அவன் யார்?

- ஆர்.அருள், சுவாமிநாதா உதவி பெறும் நடுநிலைப் பள்ளி, சுவாமிமலை



VI. 1.எட்டாத கொம்பில் மிட்டாய் பொட்டலம் - அது என்ன?

2. வெளிச்சத்தைச் சுமந்தபடி வீதியுலா வருவான் - அவன் யார்?

மலர்ந்த பூ?

3. சடக்கென்று வருவான்; சத்தமிட்டுப் போவான் - அவன் யார்?

4. இரவுப் பாடகன்; ஊசியும் போடுவான் - அவன் யார்?

5. ஓசையிடுவான்; உணவு சமைப்பான் - அவன் யார்?

- பி.சர்வேஸ்வரன், உறுப்பினர் எண் : 456, மதுரை

VII. 1.மீன் பார்த்துத் தின்பதேன்? மிதியடியில் நடப்பதேன்?

2. ஆடை உடுத்தியிருக்கும்; பெண்ணும் அல்ல. அதனுள்ளே முத்திருக்கும்; சிப்பி அல்ல. தாடியுண்டு, மீசையுண்டு; மனிதன் அல்ல. தக்கதோர் உணவாகும் மக்களுக்கே - அது என்ன?

- ரவிராகுல், ஈரோடு

விடைகள் :

I. 1.சேவல், கோழி, முட்டை, குஞ்சு, 2.பச்சைக்கிளி, 3.நாவல்பழம்

II. 1.தீக்குச்சி, 2.நுங்கு, 3.லைட் சுவிட்ச்

III. 1.உலக வரைபடம், 2.வேப்பம்பூ, 3.பலூன்

IV. 1.குடை, 2.தபால், 3.பின்னல்

V. 1.பேட்டரி லைட், 2.வெடி

VI. 1.தேன்கூடு, 2.மின்மினிப் பூச்சி, 3.தும்மல், 4.கொசு, 5.குக்கர்

VII. 1.முள்ளிருப்பதால், 2.மக்காச் சோளம்







ஆமை

எஸ். திவ்யா,
பத்தாம் வகுப்பு,
கிரீன்பார்க் மெட்ரிக் பள்ளி,
ஆத்தூர்.

செயின்ட் ஹெலீனா தீவு! வரலாறு படித்தவர்களால் மறக்க முடியாத பெயர் இது. மிகப் பெரும் வெற்றிகளைச் சாதித்த மாவீரன் நெப்போலியன், வாட்டர்லூ யுத்தத்தில் தோற்ற பிறகு, கடைசிக்காலத்தில் இந்தத் தீவில் தான் சிறைவைக்கப்பட்டான். ஏற்கெனவே 'எல்பா' தீவிலிருந்து தப்பி வந்து பிரான்ஸின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவன் நெப்போலியன். ஐரோப்பா முழுமையும் தன்னுடைய பிடிக்குள் கொண்டு வந்து விடுவானோ என்று அஞ்சியவர்கள், அவனை சிறைவைக்க தொலைதூரத்தில் உள்ள இந்த ஹெலீனாத் தீவை தேர்வு செய்தார்கள். கடுமையான காவலையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். 1821-ஆம் ஆண்டு இறந்த அவனது உடலும் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டது.

இந்தத் தீவில்தான் உலகின் மிக வயதான ஒருவர் வசிக்கிறார். அவர் பெயர் ஜோனாதன். மனிதரல்ல; ஆமை!

நீரிலும் நிலத்திலும் உயிர்வாழக்கூடிய உயிரினம் ஆமை. முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் இனமான ஆமை, ஆபத்துக்கு காலத்தில் தன்னுடைய கால்களையும் தலைமையும் உள்ளே இழுத்துக் கொள்ளும்.

எதிரியின் தாக்குதலால் பாதிக்கப்படாத வண்ணம், தடிமனான மேலோடு ஆமைக்கு உண்டு. அதனால்தானோ என்னவோ. சுமார் 300 ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடியவை ஆமைகள். இந்த



ஜோனாதன் ஆமையின் வயது 176. இதற்கு முன்பு மடகாஸ்கரில் ஒரு ஆமை இருந்தது. அது 189 வயதில் - 1966ஆம் ஆண்டு இறந்து போனது.

தற்போது இருக்கும் ஆமைகளில் வயதில் மூத்த ஆமை இந்த ஜோனாதன் தான்.

"இந்த ஆமை 1902ஆம் ஆண்டு காவலர் ஒருவராலும், கைதி ஒருவராலும் செஷல்ஸ் தீவிலிருந்து, பிரான்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஹெலினா தீவிற்கு கொண்டு வரப்பட்டது. அப்போது அதற்கு வயது 50. தற்போது 176 வயதாகிறது. எனினும் இன்றும் சுறுசுறுப்பாக இருக்கிறது. ஒரு கண்ணின் பார்வை பறிபோய்விட்ட நிலையிலும், சிறப்பாகச் செயல்படுகிறது" என்கிறார்கள் பராமரிப்பாளர்கள்.

இந்த ஆமை, தன்னுடைய வாழ்நாளில் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் எட்டு மன்னர்களையும், 50 பிரதமர்களையும் பார்த்துள்ளது. இந்த ஆமையின் படமும் சமீபத்தில் கணிசமான தொகைக்கு ஏலம் போனது.

நாடு கடத்தப்பட்டவர்கள் மட்டுமே அடைக்கப்படும் இடமாகத் திகழ்ந்தது ஹெலீனா தீவு. அட்லாண்டிக் கடலின் தென்பகுதியில் உள்ள இந்தத் தீவில்தான் பெரியவரான ஜோனாதன் இப்போது வசித்து வருகிறார். இவரை ஹெலீனா அரசாங்கமே பராமரித்து வருகிறது என்பது உபரிச் செய்தி!

தாத்தா!





வானத்துல

சூரியனும் சந்திரனும்
அக்கம் பக்கந்தாங்க
வானத்துல வீடுகட்டி
வாழப்போறோம் நாங்க

ஏரிக்கரை தண்ணியெல்லாம்
ஏத்தம் வெச்சிதாங்க
ஏவிவிடும் ராக்கெட்டால
ஏத்தப்போறோம் நாங்க

தாவிவரும் மேகங்களை
சேர்த்து வெச்சிதாங்க
காவியமாய் ஆடைசெய்ய
கத்துக்கிட்டோம் நாங்க

சாத்திரங்கள் தேவையில்லை
சாதனைகள் செஞ்சிடுவோம்
ஆத்திரங்கள் தேவையில்லை
அன்புவெச்சு கொஞ்சிடுவோம்




வீடு!

சகா

கணிப்பொறி உலகம் தாண்டி
கனவை உலகாய் செய்வோம்
இனித்தனி பிரிவுகள் இன்றி
இனிதாய்க் கூடி உய்வோம்

சாதிகள் மதங்கள் வேண்டாம்
சாஃப்ட்வேர் ஹார்டுவேர் போதும்
மோதல் சிதறல் வேண்டாம்
கிராஃபிக்ஸ் ஜாலங்கள் போதும்

இதுதான் எங்கள் உலகம்
இதிலே இல்லை கலகம்
இன்னும் இன்னும் சொன்னால்
இமைகள் விரியும் தன்னால்



I. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9. இந்த எண்களை வரிசை மாற்றாமல் கூட்டவோ, கழிக்கவோ செய்து 100 என்ற விடையைக் கொண்டு வர முடியுமா? எண்களை ஒழுங்குபடுத்தி முயலுங்கள் பார்க்கலாம்.

- த.தாரணி, உ. எண் : 785,
திருவாரூர்

II. 1. அதிர்ஷ்டம் இல்லாத ஊர் எது?

2. கண்தானம் தராத ஊர் எது?

3. இரவில் பள்ளி நடைபெறும் ஊர் எது?

4. ஒட்ட முடியாத டைல்ஸ் எது?

5. கதை சொல்லும் மரம் எது?

6. குரங்குக்கு பிடித்த பூ எது?

- எம். சுபாமுராரி,
பனிரெண்டாம் வகுப்பு,
பாலபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
சேலம்

III 1. விருது வாங்கிய ஊர் எது?

2. வழுக்கி விழுகிற நாடு எது?

3.குடிசை இல்லாத நாடு எது?

4. நாதஸ்வர வித்வான்கள் போற பஸ் எது?

5. விவசாயி எப்படி கடிதம் எழுதுவார்?

6. ஐஸ் விற்பவர் எப்படி கடிதம் எழுதுவார்?

- ர.செல்வ சுவேதா,
ஏழாம் வகுப்பு,
ஸ்ரீசாரதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம்





கண்தானம்

IV. உங்கள் பொது அறிவை சோதிக்கும் புதிர். இங்குள்ள ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பதில்கள் உள்ளன. இவற்றில் கேள்விக்குரிய சரியான பதிலைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டைப் போட்ட ஜப்பானிய நகரம் எது?

அ) நாகசாகி ஆ) ஹிரோஷிமா

2. இந்தியாவின் மீது படையெடுத்த முதல் ஐரோப்பியர் யார்?

அ) நெப்போலியன் ஆ) அலெக்சாண்டர்

3. புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்த விஞ்ஞானி யார்?

அ) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஆ) ஐசக் நியூட்டன்

4. தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரிக்குப் பெயர் பெற்ற ஊர் எது?

அ) நெய்வேலி ஆ) கல்பாக்கம்

5. லண்டனில் தலைமையகம் கொண்டுள்ள சர்வதேச காவல் துறை



எது?

அ) இன்டர்போல் ஆ) ஸ்காட்லாண்ட் யார்ட்

6. பயிர்கள் செழித்து வளர உதவும் மண் எது?

அ) வண்டல் மண் ஆ) கரிசல் மண்

7. இந்தியாவில் வெளிவந்த முதல் பேசும் திரைப்படம் எது?

அ) காளிதாஸ் ஆ) ஆலம் ஆரா

8. 'மலைகளின் அரசி' என்று சொல்லப்படும் கோடைவாசஸ்தலம் எது?

அ) ஊட்டி ஆ) கொடைக்கானல்

தராத ஊர்?

9. 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்ற வைணவ இலக்கியத்தை இயறியவர்கள் யார்?

அ) ஆழ்வார்கள் ஆ) நாயன்மார்கள்

10. வளைகுடாப் போரில் (1991) அமெரிக்கா பயன்படுத்திய ஏவுகணை எது?

அ) பேட்ரியாட் ஆ) ஸ்கட்

- அ.அனீஸ் ஃபாத்திமா,
உறுப்பினர் எண் : 34,
பதினொன்றாம் வகுப்பு,
போடி

V. 1.மரியாதைச் சொல்; ஒரு பயிர்; பயிர்களைக் காப்பது. மூன்றும் சேர்ந்தால் ஒரு ஊரின் பெயர். அது எந்த ஊர்?

2. மும்மூர்த்திகளுள் ஒருவர்; புனித நதியின் பெயர். இரண்டும் சேர்ந்தால் வரும் ஊரின் பெயர் என்ன?

3. ஐந்து நதிகள் பாயும் இடம். இந்தியாவின் கோதுமைக் களஞ்சியம். இரண்டையும் குறிக்கும் மாநிலம் எது?

4. உணவுப் பண்டங்களை மொய்ப்பது; சாலையின் வேறுபெயர். இரண்டும் சேர்ந்தால் வரும் ஊர் எது?

- ரா.பிரதீப்குமார்,
பதினொன்றாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

VI.


1.தந்தை இல்லா நாடு எது?

2. ஓடாத மான் எது?

- ஆர்.அம்பிகா,
மதுரை

விடைகள் 64-ம் பக்கம்





"ரவிதாஸ், எப்படியாவது உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடியுங்கள். இன்னும் இரண்டு நாளில் தேர்வு தொடங்கப் போகிறது."

கல்லூரி முதல்வர் கனகராஜ் கவலை ததும்பச் சொன்னார்.

"கவலைப்படாதீர்கள்" என்ற ரவிதாஸ் எழுந்தார்.

ஆண்டுத் தேர்வின் வினாத்தாள்கள் யாராலோ காப்பி செய்யப்பட்டிருக்கின்றன. செய்தது யார்? திட்டமிட்டு நடந்ததா? யோசனையாய் நடந்தார்.

வினாத்தாள் வைக்கப்பட்டிருந்த

இளங்கோவின்

ஜெ. சூர்யபிரகாஷ், [illegible]



அறைக்குள் நுழைந்தார். மேஜையின் மீது வினாத்தாள்கள் காணப்பட்டன. கீழே ஏதோ காலில் பட்டது. குனிந்தார். சீவப்பட்ட பென்சில் துகள்கள், சிறிய கூம்புகளாக மண் படிவுகள் தென்பட்டன.

மீண்டும் நிமிரும்போது, மேசையின் ஓரத்தில் பென்சில் கீறியிருந்தது. கூர்ந்து பார்த்தார். அவசரத்தில் நகர்ந்தபோது கோடு இழுத்த மாதிரித் தோன்றியது. அந்த இடத்தில் நின்று எதிரே பார்த்தார். அங்கும் ஓர் அறை இருந்தது.

ஏதோ சந்தேகத்துடன் உள்ளே நுழைந்தார். விளக்கைப் போட்டுக் கீழே பார்த்தார். அங்கும் கூம்பு வடிவத்தில் மண் படிவுகள்.

அதைப் பார்த்தவுடன் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது ரவிதாஸுக்கு. மீண்டும் முதல்வரிடம் சென்று அமர்ந்தார்.

''உங்களுக்கு யார்மீதும் சந்தேகம் உண்டா?''

''ம்... குமரனோ, சேகரோ செய்திருப்பாங்களோ என்று நினைக்கிறேன்'' என்றார் முதல்வர்.

''ஏன்?''

''ம்... அவர்கள், முரட்டுத்தனம் கொண்டவர்கள்; தவிர, படிப்பிலும் சுமார்தான். அதனால் அவர்கள் செய்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.''

அவர் சொன்னதைக் கவனித்த ரவிதாஸ், மீண்டும் கேட்டார்.

''உங்களைச் சந்திக்க சுலபமாக வருவது யாராக இருக்கமுடியும்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?'' ஒரு நிமிடம் யோசித்த முதல்வர் சொன்னார்.

''பணியாளர் மணி, சந்துரு, இளங்கோ, கோவிந்த் ஆகிய மாணவர்கள் சுலபமாக வருவார்கள். இளங்கோ ஓட்டப் பந்தயத்திலும் படிப்பிலும் கெட்டிக்காரன். சந்துரு கவிதை எழுதும் திறம் பெற்றவன். கோவிந்த் நன்கு வரைவான். ஒழுக்கமான மாணவர்கள் இவர்கள்.''

அதைக் கேட்ட ரவிதாஸ் ''காலையில் சந்திப்போம்'' என்று வீட்டுக்குக் கிளம்பினார். மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. நேரம் ஓடியதே தெரியவில்லை.

இருளேறிய நிலையில், வெளியே நடந்தார். முதல் நாள் பெய்த மழையின் ஈரம் முற்றிலுமாக காயவில்லை. ''யாராக இருக்கும்?'' என்ற சிந்தனை நீண்டதே தவிர, பதில் தெரியவில்லை. வீட்டுக்குத் திரும்பி, செருப்பை கழற்றினார். அதிலிருந்து மண் உதிர்ந்தது. சின்னச் சின்ன சதுரங்களாக...!

அதைப் பார்த்தார். முதல்வரின் அலுவலகத்தில் கண்ட கூம்பு வடிவ மண் துகளின் நினைவு வந்தது அவருக்கு. உடனே முதல்வரை தொலைபேசியில் அழைத்தார். முதல்வர் எடுத்தவுடன், ''சார், உங்க ஸ்டூடண்ட்ல ஷூ யூஸ் பண்றவங்க

மனமாற்றம்!

மேல்நிலைப் பள்ளி, மேட்டுப்பாளையம்.

யாரு?''

''ஷூ...'' என்று இழுத்த முதல்வர், ''இல்லியே... எல்லாருமே செருப்புதான் போடுவாங்க'' என்றார்.



அந்தப் பதிலைக் கேட்ட ரவிதாஸுக்கு ஏமாற்றமாகிவிட்டது. என்றாலும், சரி என்று போனை வைத்துவிட்டார். அடுத்த சில நிமிடங்களில் ஒலித்தது ஃபோன்.

''ரவிதாஸ், உடனே இங்கு வாருங்கள்'' என்றார் முதல்வர் கனகராஜ். உடனே புறப்பட்டுப் போனார் ரவிதாஸ்.

அங்கே -

முதல்வரின் அறையில் நின்று கொண்டிருந்தான் இளங்கோ. ரவிதாஸைப் பார்த்தவுடன் அவனே பேச ஆரம் பித்தான்.

''மன்னிச்சிடுங்க சார். அந்தத் தப்பைச் செய்தது நான்தான். காலைல ரன்னிங் ப்ராக்டிஸ் முடிச்சுட்டு வரும்போது ரூம் கதவு லேசா திறந்திருந்தது. எட்டிப் பார்த் தேன். யாரும் இல்ல. திரும்ப நினைச் சப்ப, டேபிள் மேல இருந்த கேள்வித்தாள் கண்ணுல பட்டது. என் கையில பேப்பர் பேனா எதுவும் இல்ல. அங்க இருந்த பென்சிலை சீவி, கீழே கிடந்த ஒரு பேப்பர்ல குறிச்சுகிட்டுப் போனேன். தப்புதான் நான் செஞ்சது...''

அவன் பேசுவதைக் கவனித்த ரவிதாஸ் கேட்டார் :

''ஏன் இப்ப இதை ஒத்துக்கிட்ட?''

''காலைல சார்கிட்ட சொல்லத்தான் வந்தேன். நீங்க இருந்தீங்க. அதனால பேசாம போய்ட்டேன். ரெண்டு மூணு தடவை வந்தபோதும், நீங்க இருந்தீங்க. உங்க முன்னால சொல்ல எனக்கு தைரியம் வரலை.''

அடுத்துக் கேட்டார் ரவிதாஸ்!

''ப்ராக்டிஸ் பண்றப்ப ஷூ போடுவ தானே?''

''ஆமாம் சார்'' என்றான் இளங்கோ.

முதல்வர் கனகராஜுக்கு ஆச்சர்யம்! ரவிதாஸ் சொன்னார்.

''நீ நின்ற இரண்டு இடங்களிலும் கூம்பு வடிவில் மண்துகள் சிதறியிருந்தது. அதனால்தான் கேட்டேன்.''

ரவிதாஸின் புத்தி கூர்மையும், இளங் கோவின் மன மாறுதலையும் உணர்ந்தார் கனகராஜ்.


''இளங்கோ... வெற்றி நேர்மையான முறையில், தகுதியால் வரவேண்டும். ஏமாற்றலும், திருட்டுத்தனமும் தரும் வெற்றி நிலைக்காது. இனி கவனமாயிரு'' எச்சரித்து அனுப்பினார் முதல்வர் கனகராஜ்.

''சரியாகச் சொன்னீர்கள்'' என்றார் ரவிதாஸ்.



ரா.வைஷ்ணவி,
உ. எண் : 625,
நான்காம் வகுப்பு,
அமிர்தா வித்யாலயம்,
செகந்திராபாத்





ஏ.ஐ.தஸ்லீம் பாத்திமா,
உ. எண் : 646,
ஐந்தாம் வகுப்பு, நஷரத்
பெண்கள் மேல்நிலைப்
பள்ளி, சேலம்




சுட்டீஸ் கைவண்ணம்!

எஸ்.டாலியா டிக்ஸி,
உ.எண் : 24, நான்காம் வகுப்பு, விக்டரி
மெட்ரிக் மே.நி. பள்ளி, மைலோடு





ஆர்.ஸ்ரீவிஷ்ணு பிரதீபா
லக்ஷ்மி,
மூன்றாம் வகுப்பு, மகரிஷி வித்யா
மண்டிர் பள்ளி, ராஜபாளையம்



ப.அபிஷேக்,
நான்காம் வகுப்பு, விவேகானந்தா
வித்யாலயா மெட்ரிக் பள்ளி,
முத்தூர்

மாங்கிஃபெரா







செம்பருத்திப் பூ என்றால் நமக்கு உடனே அதன் சிவப்பு நிறமும், முன்புறம் நீண்டுள்ள தூவியும் நினைவுக்கு வரும். அதுவே, 'ஹைபிஸ்கஸ் ரோஸா ஸைனென் ஸிஸ்' என்றால் தெரியுமா? செம்பருத்தி யின் தாவரவியல் பெயர்தான் அது. அதேபோன்று மேலும் சில பெயர்களை கீழே பார்க்கலாம்.

அறிவியல் பெயர்கள்

பூனை - ஃபெலிஸ் கேடஸ்
காகம் - கோர்வஸ் கொரோனெஸ்
வல்லூறு -ஃபால்கோ பெரிகிரைனஸ்
மாம்பழம் - மாங்கி ஃபெரா இண்டிகா
ஆரஞ்சு - சிட்ரஸ் சைனன்ஸிஸ்
புலி - பாந்திரா டைகரிஸ்
சிங்கம் - பாந்திரா லியோ
ஆப்பிள் - மாலஸ்ப்யூமிலா
ஆலமரம் - ஃபிகஸ் ரிலிஜியோஸா
வேம்பு - அஸடிரக்டா இண்டிகா
பிஜியன் - கொலம்பியா லிவியா

- அதிபன் அன்புமணி,
ஐந்தாம் வகுப்பு, உ. எண் : 120,
ஈரோடு






அறிவியல்
இண்டிகா?



விடைகள்

I. 123 - 45 - 67 + 89 = 100

II. 1. 'லக்'நோ, 2.'ஐ'தராபாத், 3.திருச்சி'ராப்பள்ளி', 4.டெக்ஸ்'டைல்ஸ்', 5.'நாவல்' மரம், 6.சா'மந்தி' பூ

III. 1.'விருது' நகர், 2.'கிரீஸ்', 3.'பங்களா'தேஷ், 4.PP, 5.நிலம் நிலமறிய ஆவல், 6.உருகி உருகி

IV. 1.ஹிரோஷிமா, 2.அலெக்சாண்டர், 3.ஐசக் நியூட்டன், 4.நெய்வேலி, 5.ஸ்காட்லண்ட் யார்ட், 6.வண்டல் மண், 7.ஆலம் ஆரா, 8.ஊட்டி, 9.ஆழ்வார்கள், 10.பேட்ரியாட்

V. 1.திருநெல்வேலி, 3.சிவகங்கை, 4.பஞ்சாப், 5.ஈரோடு

VI. 1.'தாய்'லாந்து, 2.அந்த'மான்'



சரியான்னு பாருங்க!

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

1.பக்கெட் கைப்பிடி
2.மேசையில் மீன்
3.தலையில் ரிப்பன்
4.புத்தகத்தில் படம்
5.கடிகாரத்தில் குருவி

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
(டைஜஸ்ட் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

851. வை.கவிதா, எட்டாம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவரங்கம்
852. ஆர்.நித்யஸ்ரீ, நான்காம் வகுப்பு, டி.வி.எஸ்.ஆரம்பப் பள்ளி, மதுரை - 11
853. மா.வைஷ்ணவி, ஏழாம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவரங்கம்
854. ஈ.நந்தகுமார், ஒன்பதாம் வகுப்பு, வைரவிழா மேல்நிலைப் பள்ளி, கோபி
855. எல்.தீபக், மூன்றாம் வகுப்பு, யூனிட்டி மெட்ரிகுலேஷன் பள்ளி, பொன்னேரி
856. ஆர்.ராமகிருஷ்ணன், நான்காம் வகுப்பு, செட்டிநாடு வித்யாஷ்ரம், சென்னை
857. ஜே.டி.சாய்குரு பிரசாத், ஐந்தாம் வகுப்பு, அவர் ஒன் மாடர்ன் மெட்ரிக் மே.நி.பள்ளி, திருநெல்வேலி
858. எம்.அனிஷா, ஏழாம் வகுப்பு, ஐடா ஸ்கடர் பள்ளி, வேலூர்
859. க.சசிதரன், ஏழாம் வகுப்பு, கொங்குநாடு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்
860. வி.சச்சின், ஐந்தாம் வகுப்பு, கிங்ஸ்டன் மெட்ரிக் பள்ளி, வந்தவாசி
861. ஹெச்.யாமினி, இரண்டாம் வகுப்பு, கலைமகள் மெட்ரிகுலேஷன் பள்ளி, பட்டாபிராம்
862. பா.ஸ்ரீதர்ஷினி, முதல் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் பள்ளி, மதுராந்தகம்
863. பா.கோகுல், ஏழாம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் பள்ளி, மதுராந்தகம்
864. இரா.கதிர்வேல், எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
865. ராம.மதுசூதனன், டால்மியா மேல்நிலைப் பள்ளி, டால்மியாபுரம்
866. எஸ்.பாலாஜி, ஏழாம் வகுப்பு, நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்
867. ஆர்.ஆதித்யன், ஏழாம் வகுப்பு, வே.ம.உயர்நிலைப் பள்ளி, திருவள்ளூர்
868. ஆர்.ஐஸ்வர்யா, ஆ.ம.அ.ம. மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்
869. ஆர்.அபிநயா, ஆ.ம.அ.ம. மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்
870. ப.சித்தார்த்தன், இரண்டாம் வகுப்பு, சிவா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, திருநெல்வேலி
871. புஷ்பராஜ் சுஜீஸ்வரன், நான்காம் வகுப்பு, பம்பிலப்பட்டி இந்துக் கல்லூரி, ஸ்ரீலங்கா
872. ஆர்.ஆதித்யன், பத்தாம் வகுப்பு, ஸ்ரீ சீதாராம் வித்யாலயா, சென்னை
873. ஆர்.ஸ்ரீமாதவி, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ சீதாராம் வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, சென்னை





874. டபிள்யூ.டி.ரோஷ்னா, இரண்டாம் வகுப்பு, இரத்தினகிரி பகீரதன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இரத்தினகிரி

875. ஸ்ரீஸ்வேதா, எட்டாம் வகுப்பு, வேலுடையார் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்

876. ஸ்ரீசுப்ரஜா, மூன்றாம் வகுப்பு, ஆரூர் வித்யா மந்திர், திருவாரூர்

877. ஜி.ஜெயக்குமார், ஒன்பதாம் வகுப்பு, செங்குந்தர் மகாஜன மேல்நிலைப் பள்ளி, தாரமங்கலம்

878. பெ.உ.காவ்யபூர்ணா, ஆறாம் வகுப்பு, என்.வி.கே.எஸ். பள்ளி, ஆத்தூர்

879. பி.சிபானா, ஏழாம் வகுப்பு, ஸ்டாண்டர்டு மெட்ரிக் பள்ளி, பழனி

880. எம்.சுபா, பன்னிரண்டாம் வகுப்பு, பாலபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம்

881. கே.எஸ்.சிந்துஜா, அவர் லேடிஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

882. எம்.ஹேமா, ஆறாம் வகுப்பு, பாரதிதாசன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்

883. எஸ்.காயத்ரி, இரண்டாம் வகுப்பு, வித்யோதயா மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

884. கா.ராகவ் கிருஷ்ணா, ஆறாம் வகுப்பு, மீனாட்சி அம்மாள் மெட்ரிக் பள்ளி, உத்திரமேரூர்

885. வெ.பிரியதர்ஷிணி, செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளி, திருச்சி

886. ஆர்.ஜி.சந்தோஷ் பாரதி, ஐந்தாம் வகுப்பு, புனித அந்தோணியார் மெட்ரிக் பள்ளி, சென்னை

887. எம்.கார்த்திகா, நான்காம் வகுப்பு, பீபிள் ட்ரீ அகாடமி, பெல்லாரி

888. அ.கிறிஸ்ரையன் பேட்ரிக், ஸ்ரீநிவாசா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை

889. அ.சையது இப்ராஹிம், ஏழாம் வகுப்பு, செவன்த் டே அட்வெண்டிஸ்ட் மெட்ரிக் பள்ளி, திருச்சி

890. கோ.வினீத், ஏழாம் வகுப்பு, வி.வி.மெ. மேல்நிலைப் பள்ளி, சென்னை

891. ஆர்.பாஸ்கர், ஆறாம் வகுப்பு, ஸ்ரீ சீதாராம் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

892. த.மணிவண்ணன், பதினொராம் வகுப்பு, அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி, வெள்ளக்கோவில்

893. உத்ராஞ்ஜனி புஷ்பராஜ், பதினொராம் வகுப்பு, இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

புகைப்படம்

: ....

வீட்டு முகவரி : ....

....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

894. எம்.சி.தீபிகா, மூன்றாம் வகுப்பு, குட்ஷெப்பர்ட் மெட்ரிக் பள்ளி, நாகர்கோவில்
895. எம்.சி.கேஸிகா, ஐந்தாம் வகுப்பு, குட்ஷெப்பர்ட் மெட்ரிக் பள்ளி, நாகர்கோவில்
896. ஏஞ்சலினா, நான்காம் வகுப்பு, புனித ஜேம்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, திருவைகுண்டம்.
897. தி.நிவேதிதா, எட்டாம் வகுப்பு, ஸ்ரீவித்யா மந்தர் மேல்நிலைப் பள்ளி, மணலூர்பேட்டை
898. எஸ்.சுகன்யா, ஒன்பதாம் வகுப்பு, கீழவாளாடி
899. இரா.அரவிந்த், எட்டாம் வகுப்பு, வேல்ஸ் வித்யாஷ்ரம், சென்னை
900. கே.எஸ்.வைஷ்ணவி தேவி, மூன்றாம் வகுப்பு, அவர் லேடி மெட்ரிக் பள்ளி, சென்னை



மனித உடலின் இயல்பான வெப்ப நிலை 98.6 டிகிரி. இதற்கு மேல் வெப்ப நிலை அதிகரித்தால் அதைக் காய்ச்சல் அல்லது ஜுரம் என்கிறோம். காய்ச்சல் என்பது ஒரு நோயின் அறிகுறியே தவிர, அதுவே நோயல்ல.

காய்ச்சல் வருவது எப்படி?

பாக்டீரியா, வைரஸ், ஒட்டுண்ணி, காளான் கிருமி போன்றவை உடலைத் தாக்கும்போது காய்ச்சல் வரும்.

நம் உடலின் வெப்பநிலையைச் சீராக வைத்துக்கொள்வது மூளையில் உள்ள ஹைப்போதலாமஸ். ஆனால் கிருமிகள் உடலைப் பாதிக்கும்போது இதுவும் பாதிக்கப்படும். அப்போது இது உடலின் வெப்பத்தைப் பாதுகாக்கத் தவறிவிடும். இதன் விளைவாகக் காய்ச்சல் வரும்.

காய்ச்சலின் வகைகள் :

பலருக்கும் பொதுவாக வரக்கூடியது

காய்ச்சல்





டாக்டர் கு.கணேசன். கடந்த 24 ஆண்டுகளாக கோகுலத்தில் 'டாக்டர்

ஆசிரியர்களே



தடுமக் காய்ச்சல் என்று அழைக்கப்படுகின்ற 'ஃப்ளு' காய்ச்சல். இது வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது. அசுத்தமான காற்று மூலம் இது பரவுகிறது. காய்ச்சலுடன் மூக்கு ஒழுகுதல், கண்ணில் நீர் வடிதல், இருமல் போன்ற அறிகுறிகள் இதில் இருக்கும். காய்ச்சல் ஒரு வாரம் நீடிக்கும்.

சின்னம்மை, தட்டம்மை, அம்மைக் கட்டு போன்றவையும் வைரஸால் வருகிற நோய்கள்தான். இந்த அம்மை நோய்களில் காய்ச்சல் கடுமையாக இருக்கும். உடலில் அம்மைக் கொப்புளங்கள் தோன்றும். அம்மைக்கட்டு நோயில் காதோடு சேர்த்து வீக்கம் காணப்படும்.

நோயல்ல!

டைபாய்டு காய்ச்சல் :

இது ஒருவகை பாக்டீரியாவால் வருகிறது. துவக்கத்தில் காய்ச்சல் லேசாக இருக்கும். நாளாக ஆக காய்ச்சல் கடுமையாகும். நாக்கில் வெண்படலம் தோன்றும். வயிற்றுவலி, வாந்தி ஏற்படும். அசுத்தமான குடிநீர் மற்றும் உணவு மூலம் இது பரவுகிறது.

பாக்டீரியாவால் வரக்கூடிய மற்றொரு காய்ச்சல், நிமோனியா. கடுமையான காய்ச்சல், இடைவிடாத இருமல், சளி, நெஞ்சுவலி போன்றவை இதன் அறிகுறிகள்.

மூளைக் காய்ச்சல் :

குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் வரக்கூடிய நோய்களில் மூளைக் காய்ச்சல் முக்கியமானது. பன்றிகள் நிறைந்த இடங்களில் வசிப்போருக்கு மூளைக் காய்ச்சல் வரும். கொசுக்கடியால் இது பரவும். கடுமையான காய்ச்சல், இடைவிடாத வாந்தி, கழுத்துவலி, கழுத்தை அசைக்க முடியாத நிலை ஆகியவை இதன் முக்கிய அறிகுறிகள்.

குளிர்க் காய்ச்சல் :

குளிர்க் காய்ச்சல் நான்குவிதமாக வரும். அவை : மலேரியா, யானைக்கால் நோய், சிறுநீர்ப்பாதை அழற்சி, நெறிக்கட்டு.

✿ **டாக்டர் கு. கணேசன்**

பக்க'த்தைத் தொடர்ந்து எழுதிவரும் 'கோகுலம் டாக்டர்'. இவர் விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தைச் சேர்ந்தவர். இதுவரை 25 நூல்களை எழுதியுள்ளார். பல பரிசுகளும் விருதுகளும் பெற்ற இவருக்கு சமீபத்தில் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் 'மகாகவி பாரதி

காரணம்!

அறிவியல் தமிழ் விருது' வழங்கிச் சிறப்பித்துள்ளது.

''நான் விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ள புதுச்செந்நெல்குளம் கிராமத்தில் பிறந்தவன். பள்ளியில் படிக்கும்போதே எனக்குப் புத்தகங்களை வாசிப்பதில் ஆர்வம் அதிகம்.

எனக்கு ஒன்பதாம் வகுப்பு வரலாற்று



இவற்றில் கொசு கடிப்பதன் மூலம் வருவது மலேரியாவும் யானைக்கால் நோயும். 'பிளாஸ்மோடியம்' எனும் ஒட்டுண்ணிக் கிருமிகள் கொசுக்கள் மூலம் மனிதனை அடைந்து மலேரியாவை ஏற்படுத்துகின்றன. சொல்லி வைத்த மாதிரி குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே காய்ச்சல் வரும். உடல் வெட, வெடவென நடுங்கும். பிறகு வியர்த்து காய்ச்சல் குறைந்துவிடும். இவ்வாறு ஒரு நாள் விட்டு ஒரு நாள் இந்தக் காய்ச்சல் வரும்.

யானைக்கால் நோயில் காய்ச்சலுடன் கால்கள் இரண்டும் சிவந்து வீங்கும். கொசுக்களால் பரவும் மற்றொரு காய்ச்சல், 'சிக்குன் குனியா'. இதில் கால் மூட்டுகள் வீங்கும். காய்ச்சல் ஒரு வாரம் நீடிக்கும். மூட்டுவலி ஒரு வருடம் நீடிக்கும்.

சிறுநீர்ப்பாதை அழற்சியில் நீர்க்கடுப்பு இருக்கும். உடலில் எங்காவது புண் இருந்தால் அதன் அருகில் உள்ள நெறிக்கட்டி வீங்கி குளிர்க் காய்ச்சல் வரும். தொண்டைப் புண், டான்சில் வீக்கம், வயிற்றுப் போக்கு, மஞ்சள் காமாலை, குடல் அழற்சி, காதில் சீழ் வடிந்தாலும், காய்ச்சல் வரும்.

எலிக் காய்ச்சல் :

'லெப்டோஸ்பைரா' எனும் பாக்டீரியா தாக்கும்போது எலிக் காய்ச்சல் வருகிறது. எலிகளின் சிறுநீரில் இக்கிருமிகள் வசிக்கும். மழைக் காலத்தில் மழைநீரில் எலிகளின் சிறுநீர் கலக்கும். அந்த அசுத்த மழைநீர் மனிதப் பாதங்களில் படும்போது இந்த நோய் பரவும். கடுமையான காய்ச்சலுடன் மஞ்சள் காமாலையும் சேர்ந்திருந்

ஆசிரியராக இருந்தவர், திரு அழ. கிருஷ்ணமூர்த்தி. இவர் ஒரு எழுத்தாளரும்கூட.

இவர் வகுப்பு நடத்தும்போது நிறைய கதைகள் சொல்வார். பல சமயங்களில் பாதிக்கதையைக் கூறிவிட்டு, மீதிக் கதையை மாணவர்களையே முடிக்கச் சொல்லுவார். கதையை நன்றாக முடிக்கும் மாணவருக்குப் பென்சில்களைப் பரிசாகத் தருவார். இப்படி படைப்பிலக்கியத்தில் எனக்கு ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தியவர் ஆசிரியர் அழ.கிருஷ்ணமூர்த்திதான்.

பிறகு, நான் மருத்துவக் கல்லூரியில் படித்து டாக்டர் ஆகும் வரை சிறுகதைகளையும் கவிதைகளையும்தான் எழுதிக் கொண்டிருந்தேன். கட்டுரைகளை எழுதியதில்லை. 1984ம் வருடம், கோகுலம் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்கள், 'குழந்தைகள் தினவிழா' நிகழ்ச்சிக்காக இராஜபாளையம் வந்திருந்தார்கள்.

தால், அது எலிக் காய்ச்சலாக இருக்கலாம்.

டெங்கு காய்ச்சல் :

கொசுக்களால் பரவும் வைரஸ் காய்ச்சல் இது. பெரியவர்களைவிட குழந்தைகளைத் தான் இது அதிகமாகத் தாக்கும். கடுமையான காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி, தோலில் சிவந்த தடிப்புகள் தோன்றுதல் போன்றவை இதன் அறிகுறிகள்.

பரிசோதனைகள் என்ன?

காய்ச்சல் உள்ளவரை மருத்துவரிடம் காண்பித்து, காரணம் தெரிந்து சிகிச்சை பெற வேண்டியது முக்கியம். எக்ஸ்-ரே அல்லது ஸ்கேன் எடுப்பது, ரத்தம் மற்றும் சிறுநீரைப் பரிசோதித்துப் பார்ப்பது போன்றவற்றால் காய்ச்சலுக்குக் காரணம் கண்டுபிடித்து விடலாம். அதற்கேற்ற சிகிச்சை பெற்றுக் கொண்டால் காய்ச்சல் குணமாகிவிடும்.

காய்ச்சலுக்கு முதலுதவி :

காய்ச்சலைக் குறைக்க 'பாராசிட்டமால்' மாத்திரையைச் சாப்பிடலாம். காய்ச்சல் அதிகமாக இருந்தால் பஞ்சு அல்லது பருத்தியிலான துண்டு ஒன்றை சாதாரணத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து கொண்டு நோயாளியின் நெற்றி, மார்பு, வயிறு, அக்குள், தொடை போன்ற இடங்களில் விரிக்க வேண்டும். துணி உலர்ந்ததும் மீண்டும் அதைத் தண்ணீரில் நனைத்து உடலில் விரிக்க வேண்டும். இப்படிச் செய்தால் அரை மணி நேரத்தில் காய்ச்சல் குறைந்துவிடும்.

6 வழி!

காய்ச்சலைத் தடுக்க ஆறு வழி!

1. சுய சுத்தம் பேணுதல்
2. சுற்றுப்புற சுகாதாரம் காத்தல்
3. தூய குடிநீர் பருகுதல் அல்லது கொதிக்க வைத்து ஆறிய குடிநீர் பருகுதல்
4. ஈ மொய்த்த உணவுகளை தவிர்த்தல்
5. சத்துள்ள உணவுகளை சாப்பிடுதல்
6. தடுப்பு ஊசிகளை முறைப்படி போட்டுக் கொள்ளுதல்

அவரைச் சந்தித்தபோது, 'குழந்தைகளுக்குக் கதை, கவிதைகளை எழுதுவதற்கு பல பேர் இருக்கிறார்கள். மருத்துவத்தைத் தமிழில் எழுதுவதற்குத்தான் அதிக ஆள் இல்லை. நீங்கள் அதை எழுதலாமே. இப்போது நீங்கள் சரி என்று சொன்னால் கோகுலத்தில் உங்களுக்கு மூன்று பக்கம் ஒதுக்கத் தயார்' என்றார். எனக்கு முதலில் தயக்கமாகத்தான் இருந்தது. என்றாலும் கோகுலத்திலிருந்து கிடைக்கும் வாய்ப்பை விட்டு விடக்கூடாது என்று துணிச்சலுடன் ஒத்துக்கொண்டேன். இப்படி என்னை அறிவியல் தமிழுக்குத் திருப்பியவர் குழந்தைக் கவிஞர்தான். கோவை பாரதியார் பல்கலைக்கழகம் எனக்கு வழங்கியிருக்கும் 'மகாகவி பாரதி அறிவியல் தமிழ் விருதை' குழந்தைக் கவிஞருக்கு அர்ப்பணிக்கின்றேன். பள்ளி ஆசிரியர் பத்திரிகை ஆசிரியர் ஆகிய இருவருமே என் வளர்ச்சிக்குக் காரணம்! என் அறிவியல் தமிழ் வளர்ச்சிப் பணிக்கு ஒரு படைப்புக்கலனாக இருக்கும் கோகுலத்துக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்!


முத்துமாலை பரிசு!


குழந்தைக் கடவுள்கள் - 4


கதை : ராகுல்   படம் : வேதா





ஆனால்...?
தாங்கள் பாடிய கந்தர் கலிவெண்பா கேட்டேன். அதுபோல...
என் அன்னையையும் பாட வேண்டும்.
புரியவில்லை மன்னவா!
அன்னை மீனாட்சியை பாட வேண்டும்.
மீனாட்சி, கலைகளின் நாயகி.... மாதங்கி!
ஆமாம், அந்த...
...அன்னை மீது பிள் ளைத்தமிழ் பாடுங்கள்.
தாயை தாலாட்ட வேண்டுமா, சரி; நாளைக்கே பாடுவோம்.
மிக்க மகிழ்ச்சி சுவாமி;


முரசொலிக்கிறது...
நாளை ஆயிரங்கால் மண்டபத்தில் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றமாகிறது.


மண்டபத்தில்...
குழந்தையா இருந்தப்ப இவருக்கு பேச்சே வரலை.
அப்புறம் திருச்செந்தூர் முருகன் அருளாலதான் பேச்சு வந்தது.
பேச்சா? கவிதையே பாடுகிறார்.


கூட்டத்தில் ஒரு சிறுவன்.
பிள்ளைத் தமிழ்னா...


இறைவனை குழந்தையா வரிச்சுப் பாடறது...



பாட ஆரம்பிக் கிறார்.
பாமழையாகப் பொழிகிறாரே?
அதற்குள் நாற்பது பாடல்கள் முடிந்துவிட்டன.
வருகைப் பருவம்....
வருகவே!
சன்னதியில் மீனாட்சி...
குழந்தையாக வர வேண் டுமா? இதோ வருகிறேன்.
மறுகணம் ஒரு சிறுமி...
மன்னர் கழுத்திலிருந்து முத்துமாலையை எடுத்து குமாரகுருபரரிடம் அளித்துவிட்டு...
மீனாட்சி சன்னதிக்குள் சென்று மறைகிறாள்.
தாயே நீயா வந்தது!
மீனாட்சி புன்னகைத்தாள்

மகன் அலெக்சாண்டர்மீது எலிஸா அன்பைப் பொழிந்தார். ஆனால் மகன் என்ன சொன்னாலும் எலீஸாவுக்குக் கேட்காது. காரணம், அவருக்குக் காது கேட்காது.

இதனால், அலெக்ஸாண்டருக்கு ரொம்ப வும் சோகமாகிவிட்டது. 'எல்லாப் பையன் களும் அப்பா, அம்மாவுடன் நன்றாகச் சிரித்துப் பேசுகிறார்கள், நான் மட்டும் என் அம்மாவிடம் பேசமுடிவதில்லையே. இதற்கு என்ன செய்யலாம்!' என்று யோசித்தார்.

அவருடைய வேதனையைப் புரிந்து கொண்ட உறவினர்கள், அவருக்கு ஒரு சின்ன அட்டைக் குழாயைக் கொடுத்து, 'இதை வைத்துப்பேசு' என்றார்கள்.

அதையும் அலெக்ஸாண்டர் முயற்சி செய்து பார்த்தார். அதனால், பலன் இல்லை.

இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஏதேனும் வழி உண்டா என்று அறிவியல் புத்தகங்களில் தேடத் தொடங்கினார். அப்போதுதான், அவர் சத்தங்களைப் பற்றி நிறையப் படிக்க ஆரம்பித்தார்.

சத்தங்களைப் பற்றிப் படிக்க என்ன இருக்கிறது?

நிறைய இருக்கிறது. முதலில், நீங்கள் எப்படிப் பேசுகிறீர்கள்?

உங்களுக்குள் இருக்கும் சத்தம் அங்கிருந்து வெளியேறி வருவது எப்படி?





முதல் டெலிஃபோன் பேச்சு!

என். சொக்கன்

நீங்கள் பேசுவதை எதிரில் இருக்கும் உங்கள் நண்பர் தெளிவாகக் கேட்கிறாரே, அது எப்படி?

உங்களுடைய வாயிலிருந்து வெளிவருகிற ஒலி அலைகள், காற்றில் பரவுகின்றன; உங்கள் நண்பருடைய காதுகளுக்குச் சென்று சேர்கின்றன.

ஒருவேளை, இந்த உலகத்தில் காற்றே இல்லாவிட்டால்? அப்போது யார் பேசுவதும் யாருக்கும் கேட்காது, இல்லையா?

இப்படிப் பல்வேறு விஷயங்களைப் படித்து, சிந்தித்து, ஆராய்ந்தார் அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல். அப்போதுதான் 'ஒலி அலைகளை ஏற்றுக்கொள்ளும் திறன் அம்மாவின் காதுக்கு இல்லை' என்பது அவருக்குப் புரிந்தது.

அப்படியானால், வேறு வழியில் சத்தத்தை உணரச் செய்ய முடியுமா என்று யோசித்தார்.

ஒரு சின்னப் பயிற்சி! பெரிய வெள்ளைக் காகிதத்தை உங்கள் வாய்க்குச் சற்று முன்னால் பிடித்துக் கொள்ளுங்கள், பிறகு சத்தமாக ஒரு பாட்டுப் பாடுங்கள்.

இப்போது என்ன ஆகிறது? நீங்கள் பாடப் பாட, அந்த வெள்ளைக் காகிதம் லேசாக அதிர்கிறது, இல்லையா?

இதன் அர்த்தம், நாம் பேசும்போது, அல்லது பாடும்போது வெளியாகும் ஒலி அலைகள், அதிர்வுகளை உருவாக்குகின்றன. இந்த அதிர்வுகளை எதிரில் இருப்பவர் கவனித்தால், நாம் என்ன பேசுகிறோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அதாவது, அலெக்ஸாண்டரின் அம்மா எலிஸாவுக்குக் காது கேட்காவிட்டாலும் கூடப் பரவாயில்லை; அவரால் அலெக்ஸாண்டர் பேசும் அதிர்வுகளை உணர முடிந்தால் போதும்.

இந்த விஷயம் தெரிந்ததும், அலெக்ஸாண்டர் உற்சாகமாகிவிட்டார். அம்மாவின் அருகே போய் நின்று, அவருடைய தலைக்கு அருகே மெதுவாகப் பேசத் தொடங்கினார்.


ஆரம்பத்தில் அவர் என்ன செய்கிறார் என்று அம்மாவுக்குப் புரியவே இல்லை. ஆனால் சிறிது நேரத்தில், அலெக்ஸாண்டர் பேசும் அதிர்வுகளை அவருடைய அம்மாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

'அம்மா சாப்பிட்டாயா?'

அலெக்ஸாண்டரின் குரல் எலிஸாவுக்குக் கேட்கவில்லை. ஆனால் அதன்மூலம் ஏற்பட்ட அதிர்வுகள், அவருக்கு விஷயத்தைப் புரியவைத்துவிட்டன.

'இப்போதுதான் சாப்பிட்டேன் அலெக்ஸ்'

அம்மா இப்படிப் பதில் சொன்னதும், அலெக்ஸாண்டர் துள்ளிக் குதித்தார்.



அவருடைய பரிசோதனை வெற்றி! காது கேட்காத அம்மாவிடம் பேசுவதற்கான ஒரு வழியைக் கண்டுபிடித்துவிட்டார் அவர்.

இது வெறும் தொடக்கம்தான். இந்த விஷயத்தை அலெக்ஸாண்டர், எலிஸா இருவரும் தொடர்ந்து பயிற்சி செய்த போது, அவர்களால் ரொம்பச் சுலபமாக வெகுநேரம் பேசமுடிந்தது. ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

இப்படி அதிர்வுகளின்மூலம் பேசிப் பழகிய அலெக்ஸாண்டர், அதன்பிறகு நிறைய ஆராய்ச்சிகள் செய்து புதுப்புது விஷயங்களை, உத்திகளைக் கண்டு பிடித்தார்.

ஸ்காட்லாந்தில் பிறந்து வளர்ந்த அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல், இருபத்து நான்கு வயதில் அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கே பாஸ்டன் நகரில் உள்ள- அவருடைய அம்மா எலிஸா போல் காது கேட்காத குழந்தைகள் படிக்கும், பள்ளியில் ஆசிரியரானார்.

பொதுவாக, காது கேட்கும் சக்தியை இழந்த குழந்தைகள், பேசவும் முடியாமல் சிரமப்படுவார்கள். அப்படிப்பட்ட குழந்தை களுக்குப் பேசவும் கேட்கவும் பயிற்சி கொடுத்தார் அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல். அதோடு ஒலி தொடர்பான ஆய்வு களிலும் தொடர்ந்து ஈடுபட்டார்.

அதன்மூலம் ஒலி அலைகளை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குக் கடத்தக்கூடிய ஒரு புதுமையான கருவி யைக் கண்டுபிடித்தார்.

1876ஆம் ஆண்டு மார்ச் 10ம் தேதி, அவர் தம்முடைய ஆராய்ச்சி சாலையில் அவர் நின்று கொண்டிருந்தார். அடுத்த அறையில் அவருடைய உதவியாளர் வாட்ஸன் காத்திருந்தார்.

கிரஹாம்பெல் தம்முடைய கண்டு பிடிப்பைப் பரிசோதிக்கத் தயாரானார். அதில் வாய் வைத்து, 'மிஸ்டர் வாட்ஸன், இங்கே வாருங்கள்' என்று சத்தமாகக் கூப்பிட்டார். அவர் பேசிய ஒலி அலை களை, அந்தக் கருவி அதிர்வுகளாக மாற்றியது. அடுத்த அறைக்குக் கொண்டு சென்றது. அங்கே இருந்த வாட்ஸனுக்கு, அலெக்சாண்டர் கிரஹாம்பெல்லின் குரல் தெளிவாகக் கேட்டது. அதுதான், உலகின் முதல் தொலைபேசி அழைப்பு.

அலெக்ஸாண்டரின் காது கேட்காத அம்மா எலிஸாவுக்கு, நாமெல்லாம் ஒரு பெரிய 'நன்றி' சொல்ல வேண்டும். ஏனெ னில், அவருடன் பேசுவதற்காக அலெக் ஸாண்டர் கிரஹாம்பெல் கற்றுக்கொண்ட அந்தச் சின்ன விஷயம்தான், இன்றைக்கு உலகம் முழுவதும் பிரம்மாண்டமான தொலைபேசி வலைப் பின்னலாகப் பரந்து விரிந்திருக்கிறது; பல இதயங்களை இணைத்துக் கொண்டிருக்கிறது! ●

கடித மாலை

நீலத் தங்கமான தண்ணீரை பாதுகாத்து, சிக்கனமாக பயன்படுத்துவது பற்றி மாண வர்கள் கூறிய கருத்துகளைப் பின்பற்றி னால், நாட்டில் தண்ணீர் தட்டுப்பாடே வராது.

-உ.மதன்ராஜ், வீரன்வயல்

'நீலத் தங்கம் சேமிப்போம்' என்ற ஆய்வுக் கட்டுரை படித்தேன். தண்ணீர் பற்றி விழிப்புணர்வு எவ்வளவு அவசியம் என உணர்த்தியது.

- மு.அர்விந்த் சண்முகம், கோவை

'தேர்வுக்கு சில டிப்ஸ்' எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அதைப் பின் பற்றி வெற்றி பெறுவேன்.


- ஆ.பிரேம்குமார்,
உ. எண் : 422, மூஞ்சிறை

முளைக்காத விதை! அரசனின் சாமர்த்தியமும் விங்கின் திறமையும் மிக மிக பாராட்டுக்குரியவை. சிந்தனைக்கும் விருந்து படைத்தது.

- டி.எம்.முருகானந்தம், தஞ்சை

வருங்காலத் தூண்களாகிய இன்றைய மாணவர்கள், தண்ணீரைப் பாதுகாப்பது குறித்து ஆய்வுக் கட்டுரையை எழுதி, சமர்ப்பித்தது மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. அம்மாணவர்கள் மேலும் படிப்பிலும், ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கி பேரும் புகழும் பெற வேண்டும்!

- வளர்மதி மனோதாஸ்,
கன்னியாகுமரி



கட்டாணி முத்துக்கள்!

இந்திய நாடு வரிசையில் இடம்பெற்ற ஆந்திரப் பிரதேசம் பற்றிய கட்டுரையில் கூறப்பட்டிருந்த இடங்கள் ஒவ்வொன்றையும் நேரில் பார்த்து ரசித்தது போன்ற உணர்வு ஏற்பட்டது!

- கோ.மஞ்சரி, கிருஷ்ணகிரி

கவிதைப் பூங்காவில் பூத்துக்குலுங்கிய மூன்று கவிதைகளும் கட்டாணி முத்துக்கள் போல் மிளிர்கின்றன. ஆரிசன், மணிமொழி, கவிஞர் அழகுதாசன் ஆகிய படைப் பாளிகட்குப் பாராட்டுக்கள் பற்பல!

- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

விடையைச் சொல்; பரிசை வெல் - 20

1. நெப்போலியன் சிறை வைக்கப்பட்ட இடம் ....

2. ஊமத்தைக்கு ஊதா நிறம் தரும் நிறமி ....

3. '‌ஃபிகஸ் ரிலிஜியோஸா' என்பது ....

4. பூப்பந்து மட்டை தயாரிக்கப் பயன்படும் மரம் ....

5. பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் ஆசிய நாடு ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....


....

பின்கோடு ....

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 14.2.2009

போட்டி



அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 32

பரிசு ரூபாய் 1000/-

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


876


877


878


879


880


881


882


883


884


885


886


887



888


889



890


891


892


893


894


895


896


897


898


899


900

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka